வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வீர மலர் ඊළනාඩු






மாருதி

Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றும்

WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : news@eelanadu.lk மலர் : 03 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 105 பக்கங்கள் : 20





08 உக்ரைன் வான் எல்லையை பாதுகாக்கும் ஆயுதம்!





09 உக்ரைன் தலைநகர் கிவ்வில் 'ஸ்னைப்பர் வாலி' நடமாட்டம்





07 ஒப்பந்தத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்படாத இன்னோர் அம்சம்





11 பதவி உயர்வு பெற கைகொடுக்கும் உத்திகள்!


# வடக்கு மக்களை நாம் என்றும் பாதுகாப்போம்

## நயினாதீவில் கூறினார் பிரதமர் மஹிந்த

யாழ்ப்பாணம், மார்ச் 20

அன்றும் வடக்கு மக்களைப் பாதுகாத்த நாம், அந்த மக்களைப் பாதுகாத்து இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் என்ற வகையில் இன்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

19



## டக்ளஸுக்கு கொரோனா!

கொழும்பு, மார்ச் 20

கொரோனா தொற்று அறிகுறிகள் இருந்த நிலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் தமக்கு கோவிட்-19 தொற்றுறுதியானதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்த நிலையில், பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்ற

19

## பஸ் கட்டணமும் மீண்டும் உயரும்!

கொழும்பு, மார்ச் 20

அடுத்த மூன்று மாத காலத்துக்குள் பஸ் கட்டணம் மீண்டும் அதிகரிக்கக்கூடும்.

இதன்படி 25 வீதத்தால் பஸ் கட்டணம் உயரும் எனவும், ஆரம்பக் கட்ட ணமாக 25 அல்லது 30 ரூபா

19

## நாடு முழுவதிலும் அதிகரித்துவரும் திட்டமிடப்படாத வெகுஜன எதிர்ப்பு

### அரச புலனாய்வுத்துறை அறிக்கை

கொழும்பு, மார்ச் 20

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வருவதால், நாடு முழுவதும் ஒழுங்கமைக்கப்படாத வெகுஜனப் போராட்டங்கள் வளர்ந்து வருவதாக அரச புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

இந்தப் பின்னணியே ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கும் முக்கிய காரணமாக இருந்ததாகத்

19

## பால் மா விலை உயர்வு!

கொழும்பு, மார்ச் 20

400 கிராம் பால் மாவின் விலை 250 ரூபாயினால் அதிகரித்துள்ளது என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி 400 கிராம் பால் மாவின் புதிய விலை 790 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிப்பு குறித்து நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

19

## மஹிந்தவின் வருகையை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் போராட்டம்!

### த.தே.ம. முன்னணி நடத்தியது

யாழ்ப்பாணம், மார்ச் 20

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாணத்துக்கான வருகையை எதிர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக காலை 9.30 மணியளவில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள், மஹிந்த

19

## மஹிந்த வருகைக்கு எதிராக இன்று நல்லூரில் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நல்லூர் ஆலய வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆலய முன்றலில் இன்று முற்பகல் 10 மணிக்கு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்

19

## அதிகளவு போதைப்பொருள் உட்கொண்டவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 20

ஹெரோயின் போதைப்பொருளை அதிகளவு எடுத்துக்கொண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்குள் இரண்டாது இளைஞர் போதைப்பொருளை அதிகளவு உட்கொண்டதால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே நேற்று முற்பகல் வீட்டில் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

19

## கந்தரோடை செல்லும் திட்டத்தை நேற்று கைவிட்ட பிரதமர் மஹிந்த

யாழ்ப்பாணம், மார்ச் 20

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுன்னாகம் கந்தரோடை விகாரைக்கு வழிபடுவதற்காக செல்லும் தனது திட்டத்தை நேற்று கைவிட்டாரென தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று மத

19



## இந்திய கடனுதவி கிடைத்திராவிட்டால் ராஜபக்ஷ அரசுக்கு இது கடைசி வருடம்

### கூறுகின்றார் மனோ கணேசன்

கொழும்பு, மார்ச் 20

இந்திய கடனுதவி கிடைத்திராவிட்டால், இந்த சித்திரை சிங்கள-தமிழ் புது வருடம், ராஜபக்ஷ அரசுக்கு கடைசி வருடமாகி இருக்கும். புத்தாண்டின் போது இலங்கை அரசின் நிலைமையும் சிரிப்பாய் சிரித்திருக்கும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டு வந்துள்ள இந்த ராஜபக்ச மூளைகளை கொழும்பு நூதனசாலையில் வைத்து நாம் பாதுகாக்க வேண்டும்



19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

தமிழகத்திலிருந்து ஒரு மரியாதைக்குரிய பெரியவர் ஒருவரிடமிருந்து நேற்று முன்தினம் ஒரு குறுந்தகவல் வந்திருந்தது.

அதனை அப்படியே இங்கே தருகின்றேன்.

"இன்று வெள்ளிக்கிழமை 17. 3. 22. ஊர்க்குருவி படித்தேன். இவற்றைவிட நல்ல ஆலோசனையை எவரும் சொல்ல முடியாது. எவரெஸ்டின் உச்சியை அடைவதுதான் நோக்கம் என்றாலும், ஒவ் வொரு படியாக கால் வைத்துத்தான் ஏற வேண்டும். உச்சிதான் இலக்கு. வழுக்காமல் விழாமல் இடை முகாம்களில் தங்கிப் படிப்படி யாகத்தான் ஏறவேண்டும். ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்று தொடக்கம் இந்தியாவின் அரசியலார், அதிகாரிகள், அறிஞர் கள், ஆலோசகர்கள் யாவரும் ஈழத் தமிழர் தரப்புக்கு இதையே சொல்லி வருகிறார்கள்.

மலையகத் தமிழரின் இன்றைய நிலை வெற்றி நிலை. மலையகத் தலைவர்கள் இந்த அணுகுமுறையால் வென்றார்கள். ஒருபொழுதும் அவர்களுக்குத் தோல்வி வரவில்லை. 1964 உடன்பாட்டையும் தமக்கு வாய்ப்பாக்கிக் கொண்டனர். ஒரு பில்லியன் டொலர் கொடுப்பதாக இந்தியா ஒப்புக் கொண்டாலும் உடனடியாக கொடுக்கப் போவதில்லை. ஒவ்வொரு முறை தொகையை விடுவிக் கும்பொழுதும் தங்களது நன்மையைக் கவனத்தில் கொள்வார்கள். தமிழர் அரசியல் நன்மை பெற இந்தியா உதவும், இந்திய நன்மைகளுக்குத் தமிழர் உதவினால்." - இதுதான் அந்தக் குறுந்தகவல்.

நேற்று முன்தினம் ஊர்க்குருவியைப் படிக்காதவர்கள் படித்துப் பார்க்கலாம், என்ன சொல்லியிருந்தது என்று.

இந்த குறுந்தகவலைப் படித்ததும், இந்திய நன்மைகளுக்கு தமிழர் உதவினால், தமிழர் அரசியல் நன்மைபெற இந்தியா உதவும் என்ற- அந்த தகவலைப் படித்ததும், நமது தலைவர்கள் குரல்கொடுப்பதும், அடிக்கடி உச்சரிக்கின்ற விடயங்கள்தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

தமிழர்கள் அதிகாரத்துடன் இருந்தால்தான், அதாவது தமிழர் தாயகத்தின் அரசியல் நிர்வாகம் தமிழரின் கைகளில் இருந்தால்தான் இந்தியாவின் பாதுகாப்புக்கு நல்லது என்று நமது தலைவர்கள் அடிக்கடி உச்சரிக்கின்ற விடயம்தான் அது.

இந்தியாவின் பாதுகாப்பை பார்த்துக்கொள்ள இந்தியாவால் முடியாது என்பதுபோலவும், ஏதோ இவர்களால்தான் இந்தியாவை பாதுகாக்க முடியும் என்பதுபோலவும் இவர்கள் பேசுகின்ற வீரவசனங்களை கேட்டு சிரிக்காத இந்தியப் பிரஜைகள் இருப்பார் களோ தெரியவில்லை.

இன்றைய உலக ஒழுங்கை தெரிந்துகொள்ளாத நமது தலைவர் கள் இப்படித்தான் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதனைக் கேட்டு நாங்களும் (மக்களும்) கைதட்டிக்கொண்டு இருக்க வேண்டியதுதான்.

வடக்கு மாகாண சபை ஆட்சியில் இருந்தபோது, முதன் முதலில் ஒரு தென்னிலங்கையைச் சேர்ந்த முதலீட்டாளர், காற்றலை மின் உற் பத்தியை தொடங்க விரும்பி, மாகாண அரசை நாடியபோது, அவரிடமிருந்து மாகாணத்துக்கு எத்தகைய உதவியைப் பெறலாம் என்று அப்போது ஆட்சியிலிருந்த நமது 'தமிழர் ஆட்சி' யோசித்து தமது சக்திக்கு புறம்பான உதவியை பெற்றுக்கொண்டதும் அதனை தொடர்ச்சியாகப் பெற சிரமங்கள் ஏற்பட்டதும் தெரிந்தவைதான்.

இந்த செய்தி சொல்வது என்ன? தெற்கிலிருந்து காற்றலை மின்உற்பத்தியை தொடங்குவதற்கும் மாகாண சபையின் அனுமதி யைப் பெறவேண்டியிருந்தது என்பதுதான். எந்த 'அதிகாரமும்' இல்லாத இந்த மாகாண சபைக்கு அப்படியோர் அதிகாரம் இருந்திருக்கின்றது.

தெற்கிலிருந்து ஒருவர், இப்படி அனுமதி பெறுவதற்கு முயன்று, அதற்காக தொடர்ந்து மாகாணத்துக்கு சில உதவிகளை செய்வதற்கும் தயாராக இருக்கின்றார் என்றால் அதன் பொருள் என்ன? அவர் நமது வளத்திலிருந்து இலாபம் பெறப்போகின்றார் என்பதுதானே...?

இப்படி ஒருவர் அணுகுகின்றபோது, இந்த தமிழ் தேசிய அரசியல்வாதிகள், அதனை எப்படி தமிழர் நலனுக்கு பயன்படுத்தி யிருக்க வேண்டும்? ஒரு புலம்பெயர் தமிழரை அவ்வாறு முதலிட தூண்டியிருக்க வேண்டாமா?

இந்தியாவுக்கு, இந்திய நலன் என்பது இன்று பொருளாதார ரீதியானதாக இருக்கவேண்டும் என்பது கூடவா நமக்கு தெரிந்திருக்க வில்லை.

எங்கள் மண்ணில் இந்தியா நேரடியாக முதலீடு செய்வதற்கு எமக்கு அதிகாரம் இருந்தால் நாங்கள் உங்களைத்தானே அழைப் போம். எங்களுக்கு அவ்வாறு வெளிநாட்டு முதலீடுகளை அனுமதிக் கின்ற அதிகாரத்தைப் பெற்றுத்தாருங்கள் என்று கோருவதை விடுத்து உங்கள் பாதுகாப்புக்கு உதவுவோம் என்கின்றனர் நமது தலைவர்கள்.

எத்தனை காலம்தான் நாங்கள் குழந்தைகளாகவே வளரப் போகின்றோமோ...?

**- ஊர்க்குருவி.**

# சர்வகட்சி மாநாட்டுக்கு இன்னும் அழைப்பில்லை

## கூறுகின்றது எதிர்க்கட்சி

கொழும்பு, மார்ச் 20

சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்கான அழைப்பு இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சர்வகட்சிக் கூட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இதனை தெரிவித்தார்.

அழைப்பை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது குறித்து கட்சியின் பாராளுமன்ற குழு மற்றும் நிர்வாகக் குழுவினால் தீர்மானிக்கப்படும் என அவர் கூறினார்.

எவ்வாறாயினும், எதிர்க் கட்சிகளின் கருத்துக்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்காத சூழ்நிலையில் இவ்வாறான சர்வகட்சி மாநாடு நடத்தப்படுமா என்பது சந்தேகமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# தருணம் பார்த்து வெளியேற தயாராகியுள்ள எம்.பிக்கள்!

கொழும்பு, மார்ச் 20

தற்போதைய சூழ்நிலையில் பெரும் அதிருப்திக்கு உள்ளாகியுள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று முக்கியமான தருணத்தில் அரசாங்கத்தில் இருந்து விலகத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அமைச்சுப் பதவிகள் மற்றும் இராஜாங்க அமைச்சுப் பகிர்வு தொடர்பாக இந்தக் குழுக்கள் ஆரம்பம் முதலே அதிருப்தியில் உள்ளன.

அதற்குப் பிறகு அரசு கடைப்பிடித்த கொள்கைகள் குறித்து மக்களிடையே ஒருவித விரக்தி ஏற்பட்டுள்ளது.

நாட்டில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இவர்களின் அதிருப்தி உக்கிரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க முடிவு செய்துள்ளனர். இவர்கள் அடுத்த வாரம் ஜனாதிபதியை சந்தித்து தமது முடிவு குறித்து ஜனாதிபதி அறிவிக்க திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இவர்கள் 10 பேரும் சுயாதீனமாக தனித்து செயற்படுவதா அல்லது எதிர்க்கட்சியுடன் இணைவதா என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் பேசப்படுகிறது. (அ)

# சர்வதேச நாணய நிதியத்தை அரசு நாடுவதே பொருத்தம்!

## அஜித் நிவாட் கப்ரால்



கொழும்பு, மார்ச் 20

தற்போதைய நிதி நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது பொருத்தமானது என இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி ஏற்கனவே அரசாங்கத்திடம் விசேட யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தயக்கத்துடன் அந்த முடிவை எடுக்கவேண்டியுள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இந்தப் பிரச்னையைத் தீர்க்க மூன்றாம் தரப்பினரின் உதவி தேவைப்படும் என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், நாட்டின் சாதக பாதகங்களை உன்னிப்பாக அவதானித்து இதற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இல்லாவிட்டால் தற்போதைய நெருக்கடி மேலும் அதிகரிக்கலாம் எனவும் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் பொருளாதார பிரச்னைகளுக்கு தீர்வாக எட்டு அம்ச யோசனைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# மட்டக்களப்பில் கஞ்சா வளர்த்த பெண் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கதிரவெளி பால்சேனையில் உள்ள வீடு ஒன்றில் கஞ்சா செடி வளர்த்து வந்த பெண் ஒருவரை நேற்று முன் தினம் மாலை கைது செய்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து குறித்த வீட்டை சம்பவ தினமான நேற்று முன்தினம் மாலை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது வீட்டில் வளர்த்து வந்த 5 அடி உயரமான கஞ்சா செடியை மீட்டதுடன் பெண் ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# மின்சாரம், தண்ணீர்ப் பாவனை பாராளுமன்றத்திலும் குறைப்பு

கொழும்பு, மார்ச் 120

பாராளுமன்றத்திலும் மின்சாரம் மற்றும் நீர் பாவனையை பாதியாகக் குறைக்குமாறு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது.

பாராளுமன்றத்தில் மின்சாரம் மற்றும் தண்ணீருக்கான வருடாந்த செலவு சுமார் 80 மில்லியன் ரூபாவாகும். பாராளுமன்றத்தில் நீர் மற்றும் மின்சார பாவனையை கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொறியியல் துறை தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தின் பொதுக் காட்சியகம் மற்றும் விருந்தினர் காட்சியகம் ஆகியவற்றில் உள்ள மின் விளக்குகளை முழுமையாக அணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தை சேமிக்கும் நோக்கில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து மின் குமிழ்களையும் அகற்றி குறைந்த விலை எல்.ஈ.டி மின்குமிழ்களை பொறியியலாளர்கள் பொருத்தியுள்ளனர்.

சமையலறையில் தண்ணீரைப் பயன்படுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. குளிரூட்டும் இயந்திரங்களும் குறைக்கப்பட்டுள்ளதாகவும், பல மின்தூக்கிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.02.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியாவின் பதில் என்ன?

நெருக்கடியான காலத்தில் கொழும்புக்கு இந்தியா உதவுமென்று இந்திய பிரதமர் வாக்குறுதி அளித்துள்ளாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன. வசதியாக இருக்கின்ற, பெரியண்ணன், துன்பப்படும் தம்பிகளுக்கு கைகொடுத்து தூக்கிவிடுவதில், ஆச்சரியங்கள் இல்லை. அந்த வகையில், ஓர் உடனடி பெரிய அயல்நாடு, நெருக்கடியில் இருக்கின்ற சிறிய நாடுகளுக்கு உதவிய செய்யாமல் இருக்க முடியாது. இலங்கை ஒரு நட்பு நாடு என்பதே, இலங்கை தொடர்பான இந்திய அயலுறவுக் கொள்கையாகும்.

ராஜபக்ஷ அரசாங்கம் கடுமையான நெருக்கடிகளை சந்தித்து வருகின்றபோது, அதற்கு இந்தியா கைகொடுக்க முன்வந்திருக்கின்றது. மோடி - இந்தியா தொடர்பில் முன்னர் ராஜபக்ஷக்கள் அதிருப்தியில் இருந்த ஒரு கதையும் உண்டு.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, தோல்வியடைந்த மஹிந்த ராஜபக்ஷ முதலில் இந்திய உளவுத்துறையின்மீதே குற்றம் சாட்டியிருந்தார். ஒரு நேர்காணலில் - இது தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேட்டபோது, அவர்கள் (இந்தியா) நினைத்தால் அதிகம் செய்ய முடியுமென்று பதிலளித்திருந்தார்.

காங்கிரஸ் இருந்தபோது, தங்களுக்கிடையில் நல்ல உறவிருந்தாகவும் ஆனால், பி. ஜே. பி. ஆட்சிக்கு வந்த பின்னர்தான், புதுடில்லியுடனான உறவில் சிக்கல்கள் ஏற்பட்டன எனவும் கோட்டாபய குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோகரான அஜித் டோவோல், ஓர் ‘இன்டலிஜன் மேன்’ போன்று நடந்து கொண்டதாகவும், அவர் - சீனத் திட்டமான துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துமாறு தன்னிடம் கோரினார் எனவும் கூறியிருந்தார். இன்று அதே பி. ஜே. பி. அரசாங்கத்துடன் நெருங்கிச் செல்லுவதன் ஊடாகவே தாங்கள் எதிர்கொண்டுவரும் நெக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இலங்கைக்கு நெருக்கடியில் உதவும் ஆபத்பாந்தவராக இந்தியா தற்போது காட்சியளிக்கின்றது. இலங்கைக்குள் தொடர்ந்தும் தங்களின் தனித்துவத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் ஏங்கிக் கிடக்கும், இந்தியா நம்பியிருக்கும் தமிழ் மக்களுக்கு இந்தியாவின் பதில் என்ன? ஆறு கட்சிகள் இணைந்து, இந்திய பிரதமரின் தலையீட்டை கோரியிருந்தனர். இது தொடர்பில் புதுடில்லியின் பதில் என்ன? ஆறு கட்சிகளையும் ஒரே நேரத்தில் சந்திப்பதற்கு இந்திய பிரதமர் ஒரு வாய்ப்பை வழங்குவாரா? அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தை இந்திய பிரதமர் வழங்கினால், அதுவே குறித்த கடிதத்திற்கான இந்தியாவின் பதிலாக அமையும்.

வழமையாக கூட்டமைப்புக்கு மட்டுமே இந்திய பிரதமர் சந்திப்பதற்கு வாய்ப்புக்களை வழங்கியிருக்கின்றார். ஆனால், சம்பந்தனோ, பிரதமரை சந்திப்பதற்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பை, அற்ப காரணங்களைக்கூறி பிற்போட்டிருந்தார். இதனை இந்தியத் தூதுவர் நன்கறிவார். இந்த நிலையில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான, ரெலோ மற்றும் டி.பி.எல்.எவ். (புளொட்) கட்சிகளின் கடுமையான முயற்சியின் விளைவாகவே, இந்திய பிரதமருக்கான கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இதனையும் இந்திய தூதரகம் நன்றகறியும். இந்த நிலையில் ஆறு கட்சிகளின் கடிதத்திற்கான பதிலை தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். பிரதமர் மோடி பதிலளிப்பாரா? அந்த பதில் என்ன?

# கடனில் இயங்கும் பொருளாதாரம்

**பவித்திரன்**

அந்நியச் செலாவணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உள்ளூர் உற்பத்தியைப் பெருக் குதல், ஏற்றுமதிகளைப் பன்முகப் படுத்துவதல் என்பவற்றுக்குப் பதிலாக கடன் பெறுதல் என்பதை மட்டுமே தமது தந்திரோபாயமாக இலங்கை கையாண்டது. அதன் விளைவை தான் மக்கள் இப்போது அனுபவிக்கின் றார்கள்.

இலங்கை என்றும் இல்லாத பொருளாதார நெருக்கடி ஒன்றை எதிர்கொள்கின்றது. டொலரின் பெறுமதி 280 ரூபாவைத் தாண்டிச் சென்றுள்ள நிலைமையில், அத்தியவசியப் பாவனைப் பொருட்கள் அனைத்தினதும் விலைகள் உயர்வடைந்திருக்கின்றன. சந்தையில் அவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடும் காணப் படுகின்றது. கியூவில் காத்திருப்பது என்பது காலை 6 மணிக்கே ஆரம்பமாகி விடுகின்றது.

டொலர் இல்லாமையால் உருவான இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக இந்தியாவிடம் கடன்பெறுவதற்காக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வது என்ற தீர்மானத்தையும் அரசாங்கம் எடுத்திருக்கின்றது. அதனுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக நிதி அமைச்சர் விரைவில் அமெரிக்கா பறக்கவுள்ளார். அரம்ப கட்ட பேச்சுக்கள் கொழும்பில் நடைபெற்றுள்ளன, இதற்காக சர்வதேச நாயண நிதியத்தின் பிரதிநிதிகள் கொழும்பு வந்திருந்தார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதன் கிழமை இரவு நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் தற்போது நாட்டில் உருவாகியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஒன்று எனக் கூறியிருக்கின்றார். இதன் மூலம் தமது பொறுப்பை தட்டிக்கழிக்க அவர் முற்பட்டுள்ளார்.

கொரோனாவினால் ஏற்பட்ட பிரச்சினை அரசின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்று சொல்லலாம். உக்ரைன் - ரஷ்ய யுத்தத்தினால் உலகளாவிய ரீதியில் எரிபொருளுக்கு, கோதுமைக்கு ஏற்படக்கூடிய தட்டுப்பாடு - விலை உயர்வு என்பன அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை. ஆனால், அரசாங்கம் விடயங்களைக் கையாண்ட முறை ஏனைய நாடுகள் கையாண்ட முறையை விட மோசமாக இருந்தது. இந்தியா, பங்களாதேஷ் மற்றும் ஆபிரிக்க நாடுகள் இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாகக் கையாண்டுள்ளன. இலங் கையின் இன்றைய நிலைக்கு தற்போதைய அரசாங்கமும், முன்னைய அரசாங்கங்களும் பொறுப்பு.

இலங்கைக்கு இறக்குமதிகளுக்கான செலவீனத்தைவிடவும், ஏற்றுமதிகள் மூலமாகக் கிடைக்கும் வருமானம் குறைவாக இருக்கின்றது. இதனால், உள்ளே வரக்கூடிய நாணயத்தைவிட வெளியே செல்லும் நாணயத்தின் அளவு அதிகமாக இருக்கின்றது. இந்த நிலைமைகளைச் சமாளிப்பதற்கு அதிகளவுக்கு கடன்களை இலங்கை பெற்றுக்கொண்டது. அதன் மூலம்தான் வெளிநாட்டு நாணயத்தை உள்ளே கொண்டுவர முடிந்தது. இதன் காரணமாகத்தான் செயற்கையான ஒரு முறையில் நாணய மாற்றுவிகிதம் இருந்தது. ரூபாவை மிதக்கவிடும் தீர்மானம் எடுக்கப் பட்டதற்கு இதுதான் காரணம். திடீரென கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையால், டொலரின் பெறுமதி அதிகரித்து இறக்கு மதிப் பொருட்களின் விலை தாறுமாறாக அதிகரித்த நிலையைத்தான் இப்போது காணமுடிகின்றது,

இந்த நெருக்கடியை ஓரளவுக்குத் தணிப்பதற்கு சர்வதேச நாயண நிதியத்தின் உதவி உதவுமே தவிர, இந்தப் பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு இது உதவப் போவதில்லை. சர்வதேச நாயண நிதியம் உதவ முன்வந்தால், இலங்கையின் பொருளாதாரம் ஒரு ஸ்திர நிலைக்கு வரும் என்ற நம்பிக்கையில் கடன்கொடுக்கும் நாடுகள் தமது கடன் எல்லையை அதிகரிக்கக்கூடும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு அங்கத்துவ நாடாகத்தான் இலங்கை இருக்கின்றது. ஆனால், ஏனைய நாடுகளைப்போலல்லாமல் நாணய நிதியம் சில நிபந்தனைகளை விதிக்கும். இலங்கையின் பொருளாதாரத்தை சீர் செய்யக்கூடிய நிபந்தனையாகளாகத்தான் அவை இருக்கும். அந்த நிபந்தனைகள் அரசுக்கு சில சமயம் சங்கடத்தை ஏற்படுத்தலாம்.

இந்திய கடனுதுவியில் நிச்சயமாக நிபந்தனைகள் இருகக்கும். இரு தரப்பு உடன்படிக்கைகள் பலவற்றை செய்ய முடியாத கட்டத்தில் இந்தியா இருந்தது. குறிப்பாக கொழும்பு துறைக கிழக்கு முனையத்தைப் பெறும் முயற்சியிலும் இந்தியா தோல்வியடைந்தது. அதேவேளையில், சீனா தன்னுடைய முதலீடுகளை இலங்கையில் வெற்றிகரமாக முன்னெடுத்து வந்திருக்கின்றது. இந்தப் பின்னணியில் தன்னுடைய நலன்களையும் உறுதிப்படுத்திக் கொண்டுதான் இந்தியா உதவும் என எதிர்பார்க்கலாம்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. சம்பூரில் சூரிய சக்தியில் இயங்கும் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும் இந்தியா அமைக்கவுள்ளது. அதனைவிட பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு என வடக்கு கிழக்கில் தமது நலன்களை - இருப்பை பேணுவதற்கு இந்தியா முற்படுகின்றது.

இந்த பொருளாதார பிரச்சினை திடீரென ஏற்பட்டதல்ல. தற்போதைய அரசாங்கமும், முன்னைய அரசாங்கங்களும் கையாண்ட தவறான பொருளாதாரக் கொள்கைதான் இதற்குக் காரணம். உற்பத்தியைப் பெருக்காமல் விட்டது. ஏற்றுமதிகளைப் பன்முகப் படுத்தால் விட்டது. இறக்குமதிகளை அதிகரித்தது என்பனதான் இதற்குக் காரணம்.

நிலைமைகளை கையாள அரசாங்கம் இதுவரையில் எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளித்ததாகத் தெரியவில்லை. ஆரம்பத்திலிருந்தே இலங்கையின் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் எல்லாம் வருமானத்தைப் பெறுவதற்கு கடன்பெறுதல், அல்லது நாயணத்தை அச்சிடுதல் என்பதாகவே இருந்துள்ளது. அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு கூட வெளிநாட்டு கடன்களை நம்பியே அரசாங்கம் காலத்தை கடத்துகின்றது.

அந்நியச் செலாவணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குதல், ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்துவதல் என்பவற்றுக்குப் பதிலாக கடன்பெறுதல் என்பதை மட்டுமே தமது தந்திரோபாயமாக இலங்கை கையாண்டது. அதன் விளைவை தான் மக்கள் இப்போது அனுபவிக்கின்றார்கள். இப்போதாவது தமது பொருளாதார உபாயங்களை அரசு மாற்றிகொள்ளவில்லை என்றால்....?

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’





# இந்தவார ராசிபலன்
## 20.03.2022 – 26.03.2022

மார்ச் - 20 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - பங்குனி - 06
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : திரிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். மனைவிஃ கணவர்வழி உறவினர்களுடன் வாக்குவாதம் வேண்டாம். நீண்டநாள் பிரார்த்தனை, வேண்டுதல்களையும் நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். குடும்பத்தினரின் விருப்பங்கள் நிறைவேறும். பணத்தை கவனமாகக் கையாளுங்கள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். உறவினர் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மனதில் தைரியம் கூடும். எனவே எதிர்ப்பவர் எண்ணம் நிறைவேறாது. பணியாளர்களுக்கு அதிகாரிகள் வலிய வந்து உதவுவர். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். மற்றவருக்காக செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சமூகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். மனைவி யால் நன்மை கிட்டும். எங்கு என்ன பேச வேண்டும் என்பதை அறிந்து கவனமாகச் செயல்பட வேண்டிய வாரம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

வருமானம் உயரும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். வழக்குகள் தொடர்பான விஷயங்களில் நல்ல முடிவு கிடைக்கும். வேற்று மொழி பேசுபவர்களால் நன்மை ஏற்படும். குடும்பத்துடன் அதிக நேரம் செலவு செய்யும்படியான வாய்ப்புகள் கிடைக்கும். பொருளாதார ரீதியான மேன்மை அடைவீர்கள். மேற்கத்திய நாடுகளில் வசித்து கொண்டிருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய இடமாற்றத்திற்கான அறிகுறிகள் தென்படும். அரசியல்வாதிகளுக்கு வெற்றி கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

ஈடுபாட்டுடன் எதையும் செய்வதால் பாரராட்டு பெறுவீர்கள். வெளிநாட்டுப் பணி கிடைக்க வாய்ப்புள்ளது. திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சி சிறப்பாக இருக்கும். ஆரோக்கியம் படிப்படியாக மேம்படும். குடும்ப பிரச்னைகள் முழுமையாகத் தீரும். சில செயல்களுக்கு வெற்றியும், சிலவற்றில் தடையும் மாறி மாறி வந்தாலும் மனதில் தளர்ச்சி வராது. நண்பர்களுக்கு உதவி செய்து அன்பை உறுதி செய்வீர்கள். வியாபாரத்தில் விரைந்து செயல்பட்டு ஆதாயம் காண்பீர்கள். மதிப்பிற்குரிய பெரியோரின் நட்பும் ஆதரவும் கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

குடும்பத்தில் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப்போக வேண்டியிருக்கும். தலைமைப் பண்பு அதிகரிக்கும். மற்றவர்களுக்குக் கற்பிக்கும் திறன் கூடும். மனதிலும் செயலிலும் பணிவும் இணக்கமும் வரும். வார இறுதியில் உங்களுக்கு சில நல்ல செய்திகள் கிடைக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும், கடின உழைப்பும், விடாமுயற்சியும் உங்கள் வாழ்க்கையில் வெற்றிக்கு வழி வகுக்கும். உடல்நலம் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

சுபவிஷயங்களில் நல்ல முடிவு கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் அதிகரிக்கும். தொழில்ரீதியான பயணங்களை ஒத்தி வைப்பது நல்லது. நிறைய உழைத்தும் லாபம் கிடைக்கவில்லையே என்ற மனக்குறை நீங்கும். மறைமுகப் போட்டிகளை எதிர் கொண்டு வெற்றி காண்பீர்கள். தந்தைக்கு நிகரான நல்ல மனிதரைச் சந்திப்பீர்கள். உறவினர் மூலமாக நல்ல விஷயங்கள் தெரிய வரும். நினைத்ததை முடிக்கும் வாரம். மனதில் பொறுப்புணர்வு கூடும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

நண்பர்களின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். பெரியோரின் சந்திப்பால் பெருமை கொள்வீர்கள். பொருளாதார வளர்ச்சியால் நற்பலன் ஏற்படும். தான, தர்மம் மூலம் உங்கள் மனதில் மகிழ்ச்சியும் மற்றவர் மனதில் நெகிழ்ச்சியும் அதிகரிக்கும். பணியிடத்தில் செல்வாக்கு கூடும். பிள்ளைகளால் பெருமை சேரும்.மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். குடும்பத்தினருடன் ஆலோசித்து பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். சொத்து விஷயமாக நல்ல முடிவு எடுப்பீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

சக ஊழியர்களின் நல்லுறவு கிடைக்கும். பழைய கடனை பற்றிய கவலை தீரும். அக்கறை காரணமாகச் செய்யும் செயல்களால் மற்றவர்களை சிரமப்படுத்த நேரிடலாம். புது வேலை கிடைக்கும். உங்கள் கீழ்ப் பணிபுரியும் ஊழியர்களைத் தட்டி கொடுத்து வேலை வாங்குவீர்கள். இழந்த பொருள் ஒன்றை மீண்டும் பெறுவீர்கள். உற்சாகமான, மகிழ்ச்சியான வாரமாக அமையும். எதிர்பார்ப்பு நிறைவேறும். முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். நீண்ட நாட்களாக தள்ளி போன விஷயங்கள் நிறைவேறும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

குடும்பத்தினரை சந்தோஷப்படுத்த முயற்சி செய்வது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். மறைமுக விமர்சனங்களை எதிர்கொள்ள நேரிடலாம். பணியாளர்கள் அவசரப்படாமல் நிதானமாக வேலைகளை கவனிப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த மனவருத்தம் தீரும். குழந்தைகளை உங்கள் கண் காணிப்பில் வைப்பது அவசியம். தொழிலில் நிதானமான முன்னேற்றம் காணப்படும். சிலருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கும். கோபமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய வாரம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பணிச்சுமை அதிகரிக்கும். அனைத்து விஷயங்களிலும் விழிப்பாக இருங்கள். உங்கள் செயல்கள் உங்களுக்கே சிரமம் தராதபடி கவனமாக இருங்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும். நல்லவர்களின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புதுஅனுபவம் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வரும். ஆன்மிக ஈடுபாடு ஏற்படும். பிரார்த்தனை நிறைவேறும். அரசாங்கம் சம்பந்தமான எந்த ஒரு விஷயத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

புதிய விஷயங்களை கற்பதில் கவனத்தைச் செலுத்துவீர்கள். சிலரிடம் விட்டு கொடுத்துப் போவதன் மூலம் பணிகளை முடிப்பீர்கள். ஆரோக்கியத்தில் முன னேற்றத்தைக் காண்பீர்கள். விலகி நின்ற நண்பர்கள் கூட உதவிக்கரம் நீட்டுவார்கள். வியாபாரத்தில் புதிய திருப்பம் ஏற்படும். சகோதரர்களுக்கு வெளிநாட்டு உதவி கிடைக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுக்கு உதவி செய்து நன்மதிப்பைப் பெறுவர். குறுகிய மனப்பான்மையால் சிலரை புறக்கணிக்க நேரிடலாம். உடல்நலனில் கவனமாக இருங்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உங்களின் செயல்கள் பிறருக்கு தொந்தரவாக இல்லாதபடி செயல்படுங்கள். குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு ஏற்படாதபடி இருங்கள். பணியில் எவ்வளவு கவனம் செலுத்துகிறீர்களோ அவ்வளவு நன்மை உங்களுக்குக் கிடைக்கும். நேரம் உங்களுக்கு சாதகமாக உள்ளது. உங்களின் உழைப்புக்கான பாராட்டு தேடி வரும். பயணத்தின் மூலம் நன்மைகளைக் காண்பீர்கள். கோபத்தை கட்டுப்படுத்தி வாழ்வில் உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். மனஅமைதி சிறப்பாக இருக்கும்.

# காகிதப் பகிர்வு

பகிர்வு -21

**கணபதி சர்வானந்தா**

இதுவும் ஒரு முகநூல் பகிர்வே. வங்காளத் திரைப்பட இயக்குநர் சத்யஜித்ரே, சிறு வயதில் தன் ஒவ்வொரு பிறந்த நாளின் போதும், தாயுடன் சென்று மகாகவி தாகூரை, அவர் நடத்தி வந்த சாந்தி நிகேதனில் சந்தித்து ஆசி பெறுவார். ஒரு முறை அப்படி ஆசிபெறச் சென்றபோது, தாகூர் அவரிடம் ஒரு கவிதையை எழுதிக்கொடுத்தார்.

“நான் உலகத்தின் பல நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறேன்.
இந்த உலகில் உள்ள மாபெரும் நதிகள், அருவிகள் என
எல்லாவற்றிலும் என் பாதம் பட்டிருக்கிறது.
ஆனால் என் மகனே! என் வீட்டுத் தோட்டத்திலுள்ள
புல்லின் நுனியில் உறங்கும் பனித் துளியை மட்டும்
பார்க்கத் தவறிவிட்டேன்.”

சத்யஜித்ரேயிடம் கவிதையைக் கொடுத்துவிட்டுத் தாகூர் “இந்தக் கவிதை என்ன சொல்ல வருகிறது என்பது இப்போது புரியாது. இந்தச் சிறு வயதில் உனக்குப் புரிய வாய்ப்பில்லை. வளர்ந்த பின் எடுத்துப் படித்துப் பார். புரிந்தாலும் புரியலாம்” என்று சொன்னார்.

பல வருடங்களுக்குப் பிறகு அந்தக் கவிதையை மீண்டும் படித்த சத்யஜித்ரே, அதன் அக தரிசனத்தை உணர்ந்து ”பதேர் பாஞ்சாலி” என்ற திரைப்படத்தை எடுத்தார். கவிஞர் நா.முத்துக்குமார் அதனைப் படித்துவிட்டுத் தனது மகனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அணிலாடும் முன்றில் கட்டுரைத் தொகுப்பில் இருந்து எடுத்ததை உங்களுக்கு..

அன்புள்ள மகனுக்கு, அப்பா எழுதுவது.

நான் உனக்கு எழுதும் முதல் கடிதம் இது. இதனைப் படித்துப் புரிந்துகொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டு இருக்கிறாய். உன் மொழியில் உனக்கு எழுத, நான் கடவுளின் மொழியை அல்லவா கற்க வேண்டும்.

மருத்துவமனையில் நீ பிறந்ததும் உன்னை அள்ளி என் கையில் கொடுத்தார்கள். என் உதிரம் உருவமானதை, அந்த உருவம் என் உள்ளங்கையில் கிடப்பதைக் கண்ணீர் மல்கப் பார்த்துக் கொண்டு இருந்தேன். உலகிலேயே மிகப் பெரிய இன்பம் எது? ”தம் மக்கள் மெய்த் தீண்டல் உயிருக்கு இன்பம்” என்கிறார் வள்ளுவர். நீ என் மெய் தீண்டினாய், மெய்யாகவே தூள் தூளாக நான் உடைந்து போனேன். உன் பொக்கை வாய்ப் புன்னகையால் நீ என்னை அள்ளி எடுத்து மீண்டும் மீண்டும் ஒட்ட வைத்துக் கொண்டு இருந்தாய்.

நீ அழுதாய், சிரித்தாய், சிணுங்கினாய், குப்புறக் கவிழ்ந்து, தலை நிமிர்ந்து, அந்த சாகசத்தைக் கொண்டாடினாய், தரை எல்லாம் உனதாக்கித் தவழ்ந்தாய். என் கை விரல் பிடித்து எழுந்தாய். நீயாகவே விழுந்தாய். தத்தித் தத்தி நடந்தாய். இந்த எல்லாத் தருணங்களிலும் நீ எமது வீட்டுக்கு இறைவனை அழைத்து வந்தாய்.

ஒரு முக்கிய விடயம். கல்வியில் தேர்ச்சிகொள்கின்ற அதே நேரம், அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக்கொள். தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதைவிட, தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக் கொண்டே இருக்கும். இறக்கும் வரை இங்கு வாழ உபயோகமாகும் சூத்திரம் அது தான். கற்றுப் பார், உடலைவிட்டு வெளியேறி உன்னை நீயே உற்றுப் பார். எங்கும், எப்போதும் அன்பாய் இரு. அன்பைவிட உயர்ந்தது இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. உன் பேரன்பால் இந்தப் பிரபஞ்சத்தை நனைத்துக் கொண்டே இரு.

ஒருபோதும் உழைக்கத் தயங்காதே. உழைக்கும் வரை உயர்ந்து கொண்டு இருப்பாய். உருவாக்கப் பழகு! இதை எழுதிக்கொண்டு இருக்கையில் என் பால்ய காலம் நினைவுக்கு வருகிறது. கிராமத்தில் கூரை வீட்டிலும், பின்பு ஓட்டு வீட்டிலும் வளர்ந்தவன் நான். கோடை காலங்களில் வெப்பம் தாங்காமல் வீட்டுக் கூரையில் இருந்து கொடிய தேள்கள் கீழே விழுந்து கொண்டே இருக்கும். அதற்குப் பயந்து என் தகப்பன் என் அருகே அமர்ந்து இரவு முழுவதும் பனை ஓலை விசிறியால் விசிறிக்கொண்டே இருப்பார். இன்று அந்த விசிறியும் இல்லை. அந்தக் கைகளும் இல்லை. மாநகரத்தில் வாழும் நீ, வாழ்க்கை முழுக்க கோடை காலங்களையும் தேள்களை வெவ் வேறு வடிவங்களிலும் சந்திக்க வேண்டி இருக்கும். அப்போது உன் தகப்பன் உன் அருகில் வந்து அமர்ந்து விசிறிக் கொண்டு இருக்கமாட்டான். எனவே உனக்கான காற்றை நீயே உருவாக்கப் பழகிக்கொள்..

ஒரு பருவத்தில் என் தகப்பன் என்னிடம் இருந்து ஒளித்து வைத்த இரகசியங்கள் அடங்கிய பெட்டியின் சாவியை நான் தேட முற்பட்டதைப்போல், நீயும் தேடத் தொடங்குவாய். பத்திரமாகவும் பக்குவமாகவும் இருக்க வேண்டிய பருவம் அது. நிறையப் பயணப்படு. பயணங்கள் முதுகுக்குப் பின்னால் இரண்டு கண்களைத் திறந்து வைக்கின்றன. புத்தகங்களை நேசி. ஒரு புத்தகத்தைத் தொடுகிறபோது நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகக் காட்டில் தம்மைத் தொலைந் தவர்கள். உன் உதிரத்திலும் அந்தக் காகித நதி ஓடிக் கொண்டே இருக்கட்டும். கிடைத்த வேலையைவிட, பிடித்த வேலையைச் செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால் உதவி செய். அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது. உறவுகளிடம் நெருங்கியும் அதே சமயம் விலகியும் இரு. இந்த மண்ணில் எல்லா உறவுகளையும் விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும்.

நீ பிறந்த பிறகுதான் என் தகப்பனின் அன்பையும் அருமையையும் நான் அடிக்கடி உணர்கிறேன்.

நாளை உனக்கொரு மகன் பிறக்கையில், என் அன்பையும் நீ உணர்வாய். நாளை ஏதோ ஒரு ஊரில் நீ உன் பேரன், பேத்திகளுடன் கொஞ்சிப் பேசி விளையாடிக் கொண்டு இருக்கையில் என் ஞாபகம் வந்தால்.. இந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் நான் வாழ்ந்து கொண்டே இருப்பேன் .

**- உன் அன்பு அப்பா.**

## மன்னிப்பு பெறுவோம்

ஞாயிறு 3ஆம் வாரம்



இன்று உலகம் முழுவதும் ஆவலோடு காத்திருப்பதும் பேசிக்கொண்டிருப்பதும் ரஷ்யா மற்றும் உக்ரைக் போர் பற்றி. இதனால் எவ்வளவு இழப்புக்கள், எவ்வளவு கொலைகள், இடப்பெயர்வுகள் ஏற்படும் என்பதை நாம் வரலாறாகக் கண்ட உண்மைகள். இவை எல்லாம் ஏற்படக் காரணம் என்ன? எமது அகந்தையும் மனிதர்களை சக மனிதர்களாக ஏற்றுக் கொள்ளாததும்தான் காரணம்.

இந்த உலக வாழ்வில நோய், துன்பங்கள், பஞ்சம், பட்டினி, போர் சாவு முதலிய தீமைகள் அற்றாடம் நம்மை சூழ்ந்துகொண்டிருக்கின்றன. இவை யாவும் மனிதனுடைய பாவத்தின் தண்டனை என்பதை விடுத்து மனிதனுடைய மனமாற்றத்திற்கு, நல்வாழ்வுக்கு அழைக்கும் கருவிகள் எனலாம். இன்றைய நற்செய்தியின் பொருளாக அமைந்திருப்பது "இவர் செய்த பாவமும் அல்ல; இவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல; கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே (யோவா 9.3) என்று கூறி நம் அனைவரையும் மனமாற்றத்திற்கு அழைக்கின்றார் ஆண்டவர்.

"என் குற்றங்களை நான் உணர்கின்றேன்..... உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்; உமது பார்வையில் தீயது செய்தேன்" என்று செல்லி மன்னிப்புக் கேட்போம்.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா

# எந்த நிபந்தனைகளுமின்றி இலங்கைக்கு இந்தியா கடன்

### அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 20

**இந்தியா இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியமைக்காக எந்த நிபந் தனையையும் விதிக்கவில்லை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு இந்தியா வழங்கிய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பயன்படுத்தப்படும் என்றும் நிதி அமைச்சர் பஸில் கூறினார்.

இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து நேற்று முன் தினம் மாலை நாடு திரும்பிய போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஊடகவியலாளர்கள் மத்தியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட கடனை வழங்கிய இந்தியா அதற்காக விதித்த நிபந்தனைகள் என்ன ? என்று ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு நிதி அமைச்சர் பதிலளிக்கையில்,

இந்த கடனை 3 ஆண்டுகளுக்குப் பின்னர் தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்துவது அவசியமாகும். ஜனாதிபதி நீண்டகாலத் திட்டமிடலின் கீழ் செயற்பட்டு வருகிறார்.

இலங்கையுடன் அயல் நாடான இந்தியா தொடர்ந்தும் நெருக்கமாகச் செயற்படுகின்றது. இலங்கைக்குத் தேவையான பொருளாதார சமூக ஒத்துழைப்புக்களை நேரடியாக வழங்குவதாக இந்தியப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

சேதனப் பசளை உற்பத்திக்காக இந்தியாவின் 'நனோ' உர தட்டுப்பாடு நிலவினாலும் இலங்கைக்குப் போதியளவான உரத்தை வழங்க இந்தியப் பிரதமர் இணக்கம் தெரிவித்தார் - என்றார். (அ)

# வங்கக் கடலில் தாழமுக்கம்!

### சூறாவளியாக வலுவடையும் சாத்தியம்

கொழும்பு, மார்ச் 20

வங்காள விரிகுடா கடற்பரப்பில் ஏற்பட்டுள்ள தாழமுக்கமானது அடுத்த 24 மணிநேரத்தில் வலுவடைந்து பின்னர் சூறாவளியாக வலுவடையும் சாத்தியம் காணப்படுவதால் மீனவர்கள் உள்ளிட்ட கடல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்காள விரிகுடாவின் மத்திய பகுதியில் நிலை கொண்டிருந்த குறைந்த அழுத்தப் பிரதேசம் தற்போது தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக மையம் கொண்டுள்ளது.

அது அடுத்த 24 மணித்தியாலங்களில் கிழக்கு- வடகிழக்கு திசையில் அந்தமான கடற்பரப்புகளை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், மார்ச் 21 ஆம் திகதியளவில் ஒரு சூறாவளியாக வலுவடையக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் தென் கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் மறுஅறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் குறித்து வழங்கப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# பயங்கரவாத தடுப்பு சட்டமூலம் 22ஆம் திகதி சபையில் விவாதம்

கொழும்பு, மார்ச் 20

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் எதிர்வரும் 22ஆம் திகதி இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்திற்காக பாராளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல்திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில்-

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டை எதிர்வரும் 22ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள கடந்த 16 ஆம் திகதி முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகப் பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இதற்கமைய திருத்தங்களுடன் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்படவிருப்பதாக ரோஹணதீர கூறினார்.

அன்றையதினம் பாராளுமன்றம் மு.ப 10.00 மணிக்குக் கூடவிருப்பதுடன் மு.ப 11.00 மணி முதல் பி.ப 4.30 மணி வரை பயங்கரவாத தடுப்பு ( தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெறும் - என்றுள்ளது. (அ)

# 'உள்ளம்' சஞ்சிகை அறிமுக நிகழ்வு!




விசுவமடு, மார்ச் 20

கலை, இலக்கியம், சமூகம், விளையாட்டு, மருத்துவம், உளவியல், தேர்ந்த சினிமா, போட்டிகள் என பல்துறை படைப்புகளோடு வெளிவரும் "உள்ளம்" இதழின் அறிமுக நிகழ்வு விசுவமடு மத்திய சனசமூக நிலைய மேற்றள அரங்கில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது.

விசுவமடு மத்திய நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் சர்வேஸ்வரன் வில்ரைசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மங்கள விளக்கு ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. வரவேற்புரையை விசுவமடு மத்திய நூலக நூலகர் ரயுலா திருச்செல்வன் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து தொடர்ந்து "உள்ளம்" இதழானது பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

தலைமையுரையினைத் தொடர்ந்து "உள்ளம்" இதழின் காலாண்டிதழ் மார்கழி 2021 இன் அறிமுகவுரையினை யோ. புரட்சி நிகழ்த்தினார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ச.தனுஜன் "சிற்றிதழ்களில் உள்ளம் சஞ்சிகையின் முக்கியத்துவம்" பற்றி உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பங்கேற்பாளர்களின் கருத்துப்பகிர்வு இடம்பெற்றதுடன் தர்மபுரம் மகா வித்தியாலய அதிபர் இந்திரா, மருத்துவ எழுத்தாளரும் வாணி வைத்திய நிலைய மருத்துவருமாகிய சிவசுப்பிரமணியம், இளைய படைப்பாளர் பாரதி மைந்தன் ஆகியோர் கருத்துக்களை பகிர்ந்தனர்.

தொடர்ந்து "உள்ளம்" ஆசிரியர் குழு சார்பாக கவிஞர் ஆ. சடாகோபன் ஏற்புரை வழங்கினார். இதன்போது "உள்ளம்" மார்கழி 2021 காலாண்டிதழில் ஓவியங்களை அளித்தோரில் ஒருவரான தர்மபுரம் மகா வித்தியாலய மாணவி கயாழினி தேவராஜனை பாராட்டி மதிப்பளித்த ஆ.சடாகோபன், குறித்த இதழானது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே வகித்த இலக்கிய மற்றும் வாசிப்பு முக்கியத்துவத்தினை விரிவாக பகிர்ந்து, நவீன சமூகத்திற்கு வேண்டிய அநேக செய்திகளை தெளிவுற வழங்கினார். (அ)

# இரசாயன உரங்களின் இறக்குமதி தடையில்லை

### விவசாயப் பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, மார்ச் 20

இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய தடையில்லை என விவசாயப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விவசாயிகளுக்கு சிறுபோகத்துக்கு தேவையான கரிம உரங்களை விநியோகிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறைக்கு எவ்வித தடையும் இல்லை என்றும் அவர் கூறினார். (அ)

# இன்று முதல் மீண்டும் மூடப்படுகின்றது சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையம்!

கொழும்பு, மார்ச் 20

மசகு எண்ணெய் இன்மையால், சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம், இன்று இரவு முதல் மீளவும் மூடப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னரும், போதுமான அளவு மசகு எண்ணெய் கிடைக்காமையால், இரண்டு சந்தர்ப்பங்களில், சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருந்தது.

இதேநேரம், நேற்று தொடர்ச்சியாக எரிபொருள் விநியோகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார். (அ)

# கோட்டாபய அரசுக்கு 'குட்பாய்' சொல்லவும் தயங்கமாட்டோம்!

## லலித் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 20

"நாட்டு மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். அவர்கள் கண்டபடி எங்களைத் திட்டுகின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்து, இது தொடர்பில் முறையிடவுள்ளோம். அவர் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் அரசுக்கு 'குட்பாய்' சொல்லுவோம்."

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான லலித் எல்லாவல.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் பிரதேச சபை உறுப்பினராக இருந்துள்ளேன். அப்போது மக்கள் என்னைத் திட்டவில்லை. தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளேன். மக்கள் திட்டுகின்றனர். காரணம், மக்கள் நெருக்கடியில் உள்ளனர்.

பட்டினியில் வாழ முடியாது. எனவே, ஜனாதிபதியைச் சந்தித்து இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தவுள்ளேன்.

பின்வரிசை எம்.பிக்கள்



என்போர் அரச புகழ் பாடுபவர்கள் அல்லர். எனவே, ஜனாதிபதியால் காத்திரமான முடிவுகள் எடுக்கப்படாவிட்டால், நாங்கள் முடிவொன்றை எடுக்க நேரிடும். அரசுக்குக் 'குட்பாய்' சொல்லவும் தயங்கமாட்டோம் - என்றார். (அ)

# இலங்கைக்கு வருகின்றார் அமெரிக்க துணை செயலர்



கொழும்பு, மார்ச் 20

அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நொலண்ட் நேற்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை, பங்களாதேஷ், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய பசுபிக் கூட்டமைப்புக்கு, அமெரிக்காவின் அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்பை வழங்கும் நோக்கில் இந்த விஜயம் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் பங்களாதேஷ், இலங்கை மற்றும் புதுடில்லியில் உள்ள வெளியுறவுத் தரப்பினருடன் ஆலோசனைகளை மேற்கொள்வார்.

இந்த விஜயங்களின்போது, அவர் தலைமையிலான தூதுக் குழுவினர், சிவில் சமூகம் மற்றும் வர்த்தக தலைவர்களையும் சந்தித்து பொருளாதார கூட்டாண்மைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# நாட்டை எப்படி ஆள்வது என்று இந்த அரசுக்கு தெரியவில்லை

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 20

"நாட்டை எப்படி ஆள்வது எனத் தற்போதைய ஆட்சியாளர்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் அனைத்துப் பிரச்னைகளுக்கும் கொரோனாவைக் காரணம் காட்டுகின்றனர்." -

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

நெருக்கடியான காலகட்டத்திலும் கொள்ளையடிப்புகள் நிறுத்தப்படவில்லை. வெள்ளைப்பூடு முதல் சீனி வரை அனைத்து விடயங்களிலும் மோசடிகள் அரங்கேறியுள்ளன. எனினும், கொரோனாவைக் காட்டி அனுதாபம் திரட்டுவதற்கு ஆளுங்கட்சியினர் முற்படுகின்றனர். தமது இயலாமையை மூடிமறைக்கப் பலதும் செய்கின்றனர்.



ஆனால், தமக்கு முடியாது என்பதை ஆட்சியாளர்கள் ஏற்கனவே நிரூபித்துவிட்டனர். சர்வதேசத்தை நாட முடியாது. நாடினால் உதவியும் கிடையாது.

எனவே, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும். அதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன். சம்பளம் உட்பட எந்தவொரு வரப்பிரதாசங்களையும் வாங்காமல் சிறந்த வழிகாட்டலை வழங்குவேன் - என்றார். (அ)

# மன்னார் மாவட்டத்தில் தொடரும் எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு

## உணவக உரிமையாளர்கள், பொதுமக்கள் பாதிப்பு

மன்னார், மார்ச் 20

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிவாயு(கேஸ்) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நிலவி வருகின்றமையால் உணவகங்களில் நாட்கூலியாக வேலை செய்யும் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள உணவகங்களில் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பணியாளர்கள் வேலை செய்து வருகின்றனர். அவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் வீடுகளில் எரிவாயு பயன்படுத்தும் மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன் மண்ணெண்ணெய் கொள்வனவுக்காக நள்ளிரவு முதல் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய அவல நிலை மன்னாரில் நிலவி வருகிறது.




டீசல் தட்டுப்பாடு காரணமாக கிராமங்களுக்குள் பயணம் செய்யும் தனியார் பஸ்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளமையால் நெடுந்தூர கிராமங்களில் வசிக்கும் பொது மக்கள் உரிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் எரிபொருள் தட்டுப்பாட்டால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸாருடன் முரண்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 20

பொலிஸாருடன் முரண்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஈ.பி.டி.பியின் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சிவலிங்கம் நிமல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் பணி நிமித்தம் சென்றவேளை கடமைக்கு இடையூறு விளைவித்ததோடு பொலிஸாரையும் தாக்க முற்பட்டார் என்று தொடர்புபட்ட இரு பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே குறித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த உறுப்பினர் கடந்த வருடமும் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# முகநூல் காதலால் வந்த வினை! இரு சிறுமிகள் துஷ்பிரயோகம்!!

முல்லைத்தீவு, மார்ச் 20

முல்லைத்தீவில் காணாமல் போய்விட்டார்கள் எனக் கூறப்பட்ட இரு சிறுமிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் இரு சிறுமிகள் கடந்த 16ஆம் திகதி காணாமல்போன நிலையில், அது தொடர்பில் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டது. அதன்பின்னர் தேடுதல் வேட்டை முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் இருவரும் நேற்று முன்தினம் மாலை புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, மட்டக்களப்பு, செங்கலடிபகுதி இளைஞர் ஒருவருடன் சிறுமி ஒருவர் முகநூல் ஊடாக காதல் வசப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியை மட்டக்களப்பு வருமாறு இளைஞன் அழைப்பு விடுத்துள்ளார். இதனையடுத்து சிறுமி தனது நண்பியுடன் வீட்டுக்கு தெரியாமல் சைக்கிளில் மாலைநேரக் கல்விக்கு செல்வதாக சொல்லிவிட்டு பற்றைக்காட்டுக்குள் சைக்கிளைப் போட்டுவிட்டு பஸ்ஸில் ஏறி மட்டக்களப்பு செங்கலடிக்கு சென்றுள்ளனர்.

செங்கலடி இளைஞன் இருவரையும் காரில் ஏற்றிச்சென்று, தான் பேசிய சிறுமியுடன் பாலியல் உறவில் ஈடுபட்ட பின்னர், அவர்கள் வீடு செல்வதற்காக அழைத்து வந்து யாழ்ப்பாணத்துக்கு செல்லும் பஸ்ஸில் ஏற்றி விட்டுள்ளார்.

இரண்டு சிறுமிகளும் யாழ்ப்பாணம் சென்று யாழ். நகரப் பகுதியில் சுற்றித்திரிந்தவேளை, அவர்களுக்கு உதவி செய்வதாக கூறி இரண்டு இளைஞர்கள் சிறுமிகளை அழைத்துக் கொண்டு சென்று வீடு ஒன்றில் தங்கவைத்து பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு பயணிக்கும் பஸ்ஸில் இரண்டு சிறுமிகளும் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளனர். இரண்டு சிறுமிகளும் புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் வந்திறங்கியுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இருவரும் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் இருவரிடத்திலும் பெறப்பட்ட வாக்குமூலத்தை தொடர்ந்து அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறுமிகள் இருவருடனும் பாலியல் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# 12.5 கிலோ கிராம் காஸ் விலையை 2000 ரூபாவால் உயர்த்த கோரிக்கை

கொழும்பு, மார்ச் 20

12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலையை 2 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு கொள்கலன் ஒன்றை விற்பனை செய்யும் போது 2,000 ரூபா வரை நட்டம் ஏற்படுவதாக லிற்றோ பாதுகாப்பு தேசிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஒரு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில் குறித்த நிறுவனத்தை கொண்டு செல்வதற்காக எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்படவேண்டும் என லிற்றோ பாதுகாப்பு தேசிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தற்போது 12.5 நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 2,675 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

எனினும் இதற்காக லிற்றோ நிறுவனத்திற்கு 4,662 ரூபா செலவாகுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)




# ‘புதன்கிழமை ஒப்பந்தத்தில்’ வெளிப்படையாக குறிப்பிடப்படாத இன்னோர் அம்சம் இதுதான்?

## இம்மாத இறுதியில் இலங்கை வரும் மோடி யாழ்ப்பாணத்துக்கும் வருகை தருவாரா?

ஒரு பில்லியன் டொலர்கள் என்பது மிகப்பெரிய தொகை. ஏறத்தாழ 264 பில்லியன் இலங்கை ரூபாய். அதை நான் நம்பராக எழுதி, எத்தனை பூஜ்யங்களென்று இந்த பத்தியை நிரப்ப விரும்பவில்லை. இது புதனன்று இந் தியா இலங்கையின் மிக மோசமான அந்நிய செலவாணி பிரச்னையைத் தீர்ப்பதற்காக தருவதாக ஒப்பந்தமிட்டுள்ள நிதி உதவி. உணவுப்பொருட்கள், மருந்துகள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு ராஜபக்‌ஷ அரசுக்கு உதவுவதற்கும் இந்த நிதி உதவி பயன்படும்.


இலங்கையின் நிதியமைச்சர் பஸில் ராஜபக்‌ஷவின் டெல்லி விஜயத்தின் போது இந்திய ஸ்டேட் வங்கிக்கும் இலங்கை அரசுக்குமிடையே கையெழுத்தான ஒப்பந்தத்தில் இது முடிவாகியுள்ளது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் நிதி உதவிக்குப் பின்னால் இருக்கும் ஒரு உள் நோக்கம் கூறப்படவில்லை - சீனாவின் கடன் பொறியில் மாட்டிக் கொள்ளாமல் இலங்கையைக் காப்பாற்ற இந்தியா எடுக்கும் முயற்சி இது. இந்திய பெருங்கடல் பகுதியில் சீனாவின் பரவலைத் தடுக்கும் எண்ணத்தோடு உருவாக்கப்பட்ட க்வாட் அமைப்பின் பிற உறுப்பினர்களான ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் நிதியுதவியும் உணர்வு ரீதியான ஆதரவும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் தாக்குதலைக் கண்டித்து அமெரிக்கா நேட்டோ விதித்திருக்கும் பொருளாதாரத் தடைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று இந்தியா எடுத்திருக்கும் முடிவு இப்போதைக்கு க்வாட் அமைப்பின் ஒற்றுமையை பாதிக்கவில்லை.

இந்த “புதன்கிழமை ஒப்பந்தத்தில்” வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத இன்னொரு அம்சமும் இருக்கிறது, அது என்னவென்றால் தமிழ்மக்களின் நீண்டகால உரிமைகளையும் அவர்களது கோரிக்கையான கூட்டாட்சியையும் பஸிலின் அண்ணன் மகிந்த நிச்சயம் நிறைவேற்றுவார் என்று இந்தியா பஸிலிடம் ஒரு உறுதியையும் கேட்டு வாங்கியிருக்கிறது என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ரத்த ஆற்றில் தமிழ் ஈழக் கனவுகள் மூழ்கிப்போனபோது தங்களைத் தாங்களே ஆளும் உரிமை, கூட்டாட்சி ஆகிய இரண்டும் இலங்கைத் தமிழர்களின் பெரிய இலட்சியமாக மாறியது. கிழக்கு மற்றும் வடக்கு இலங்கைப் பிராந்தியங்களில் உள்ள மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தி, அவர்கள் இலங்கையுடனே இருக்க விரும்புகிறார்களா அல்லது சிங்களப் பெரும்பான்மை உள்ள தேசத்திலிருந்து விலகி தனியான தமிழ்ப் பிராந்தியத்தை உருவாக்கப் போகிறார்களா என்று தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் சில தமிழ் அமைப்புகளும் தலைவர்களும் குரல் எழுப்பியுள்ளனர். ஆனால் இந்த எதிர்பார்ப்புகள் இந்தியாவுக்கு சில பிரச்னைகளை ஏற்படுத்துகின்றன.

டெல்லியும் காஷ்மீரிலிருந்து இப்படி ஒரு கோரிக்கையை எதிர்கொண்டிருக்கிறது, எதிரி அண்டை நாடான பாகிஸ்தானும் இந்த பிரிவினை போருக்கு தூபம் போட்டுக்கொண்டிருக்கிறது. 1950-60 காலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல ஷதிராவிடத் தலைவர்கள் தனி திராவிட நாடு வேண்டி பெரிய அளவிலான முழக்கங்களை எழுப்பிய நிகழ்வுகள் டெல்லிக்கு இன்னும் சிம்ம சொப்பனமாகவே இருக்கிறது. இந்தியா, பிரிட்டன், நோர்வே, அமெரிக்கா போன்ற பிற நாடுகளின் சமரச முயற்சிகளைக் கண்டுகொள்ளாமல் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்ந்து போரில் ஈடுபட்டார் என்பதைத் தாண்டி இந்தியா ஈழப்போரின் கடைசி கட்டத்தில் இலங்கைக்கு உதவியதன் முக்கியக் காரணமே, வட இலங்கை ஒருகாலத்தில் தமிழ்நாட்டுடன் இணைந்து திராவிட நாடாக மாறிவிடுமா என்ற அச்சம்தான்.

“கூட்டாட்சி”, “உரிமை”, “தனி நாடு” போன்றவற்றுக்கெல்லாம் டெல்லி செவி சாய்க்காது என்பதை விளக்குவதற்காகத் தான் புதன்கிழமை ஒப்பந்தத்தை விட்டு வேறொரு அம்சத்தைப் பற்றிப் பேசினேன். வேறு எந்த நாடும், அது சீனாவாக இருந்தாலும்கூட, இந்த கோரிக்கைகளுக்கு ஆதரவு தராது. இந்திய-இலங்கை 1987 ஒப்பந்தத்தை எடுத்து சில அம்சங்களை சீர்படுத்தி 13 ஆம் சட்டத் திருத்தத்தை மேம்படுத்துவதுதான் இப்போதைக்கு அமைதியையும் கண்ணியத்தையும் எதிர்பார்த்திருக்கும் ஈழத்தமிழர்களுக்கான சிறந்த செயல்பாடாக இருக்கும். கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், சொத்துக்களை அனுபவிக்கும் உரிமைகள் போன்ற பல தளங்களிலும்



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

மேம்பாட்டுத் துறைகளிலும் சிங்களர்களுக்கு நிகரான வாய்ப்புகளைப் பெறுவதற்கும் ஈழத்தமிழர்களுக்கான சிறந்த வழி இதுதான்.

இந்த அடையக்கூடிய லட்சியத்தை நோக்கமாக வைப்பதற்கு ஈழத் தலைவர்களுக்கு பெரிய நேரம் இல்லை. தங்களுக்கிடையில் யார் பெருந்தலைவர் என்று சண்டையிடாமல் அவர்கள் மக்களின் நலனைத்தான் அடிப்படையாக வைத்து செயல்படவேண்டும். சுயநலமும் சந்தர்ப்பவாதமும் கொண்ட தலைவர்களை அவர்களது சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிடுவதற்கு ஒரு வலுவான சிவில் சமூகத்தை உருவாக்கவேண்டும் என்று நமது ஈழநாடு வாசகர்களிடம் தொடர்ந்து வேண்டிவருகிறேன். இந்தியா மற்றும் பிற உலக நாடுகளின் உதவியோடு நீண்டகாலமாக தாமதப்பட்டுள்ள உரிமைகளையும் நீதியையும் மக்களுக்கு வாங்கித் தருவதற்கு தன்னலமற்ற தலைவர்களின் கூட்டமைப்பு ஒன்று அப்போதுதான் உருவாகும்.

சீனாவின் ஊடுருவலால் கவலையில் உள்ள இந்தியாவைத் தங்களை நோக்கித் திருப்புவதற்கு ஈழத்தமிழர்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதையும் நான் அடிக்கடி கூறியிருக்கிறேன். இந்த சூழ்நிலையை சரியாகப் புரிந்துகொள்ளும் சிங்களர்கள் தங்களுக்காக அதைப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் வேளையில், தமிழறிஞர்கள் அதைக் கண்டும் காணாமல் இருக்கிறார்கள்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் ஆகியோரின் முன்னிலையில் இந்த புதன்கிழமை ஒப்பந்தம் கையெழுத்தாவதை இலங்கையின்





நிதியமைச்சர் பஸில் ராஜபக்‌ஷ கவனித்துக்கொண்டிருக்கும்போதே ஒரு செய்தி வெளியானது. மொத்த அந்நிய கடனான 51,117.43 அமெரிக்க டொலர்களில் 10% இருக்கக்கூடிய சீனக் கடன்களை மாற்றியமைக்குமாறு இலங்கை அரசு சீனாவிடம் வைத்திருந்த கோரிக்கை புதுப்பிக்கப்பட்டிக்கிறது. ஒரு அமெரிக்க டொலருக்கு நிகராக 263.63 இலங்கை ரூபாய்கள் இருக்கும் நிலையில், கொழும்புவின் அடுத்தடுத்த அரசுகள் எந்த அளவுக்குக் கடன் வாங்கி நம்மை பாதாளத்தில் தள்ளிவிட்டார்கள் என்பதை நீங்கள் நினைத்துப் பாருங்கள். காலையில் சிந்திக்கத் தொடங்கினால் மதிய உணவையும் இரவு உணவையும்கூட தவிர்த்துவிட்டு நீங்கள் உறங்காமல் வருத்தத்தில் மூழ்கிவிடுவீர்கள்.

“ஒரு மில்லியன் டொலர் என்பது மிகப்பெரிய தொகை” என்று இந்தப் பத்தியைத் தொடங்கும்போது நான் கூறியதன் காரணம் இதுதான். ஒரு சிறிய நாட்டிற்கு அது ஒரு பெரிய தொகைதான். தேயிலை மற்றும் சுற்றுலா ஆகிய இரண்டு பெரிய அந்நிய செலவாணி பொக்கிஷங்கள் இருப்பதால் இந்த அழகான தீவு உலகிலேயே மிகவும் செழிப்பான, மகிழ்ச்சியான மக்களின் சொர்க்கமாக இருக்கவேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக இங்கு கடன் ஏறிக்கொண்டே போகிறது. மக்கள் எரிபொருளுக்கும் உணவுக்கும் நீண்ட வரிசைகளில் நிற்கிறார்கள். மக்கள் கசப்புணர்வுடனும் வருத்ததுடனும் இருக்கிறார்கள். சிங்களர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள், சமூகத்துக்குள் பிரிவுகள் என்று பலவகையில் பிளவுபட்டிருக்கிறார்கள். அய்யோ, கடவுளே!

ஒரு நீண்டகால நண்பர் எனக்கு அவரின் லண்டன் வீட்டிலிருந்து வியாழன்று போனில் அழைத்தார். மட்டகளப்பை சேர்ந்த இவர் என்னிடம் ஒரு தீவிரமான போரைத் தொடங்கினார். “அதாவது, நீங்கள் சிங்கள அரசுக்கு உதவி செய்வீர்கள், ஆனால் தமிழர்களைப் பற்றி உங்களுக்கு அக்கறை இல்லை, அல்லவா?” என்று ஆரம்பித்த அந்த உத்வேகம் என்னை முதலில் கோபிக்கத் தூண்டியது, பிறகு சிரிக்கத்தான் வைத்தது.

தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று ஒரு உறுதியைக் கொழும்புவிடமிருந்து இந்தியா வாங்கிவிட்டது என்று டெல்லியிலிருந்து எனக்குத் தகவல் வந்திருக்கிறது என்றேன். அதுவும் ஒரு நியாயமான கால அளவுக்குள் நடந்துவிடும் என்றேன். ஒரு நல்ல அரசியல் புரிதல் கொண்டவரான அவர் இந்தியாவின் அரசியல் சூழலைப் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் கூறினேன். இந்தியாவின் தெற்கு எல்லையில் உள்ள இலங்கையை நோக்கி சீனாவைப் பரவவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதே பிரதான நோக்கம் என்று அவர் புரிந்துகொள்ளவேண்டும் என்றேன். ஆனால், பாக் ஜலசந்திக்கு அப்பால் உள்ள ஈழத்தமிழர்களுடன் நமக்கு ஒரு தொப்புள்கொடி உறவு உள்ளது, அவர்களை நாங்கள் எப்போதும் கைவிடமாட்டோம்.


“அண்டை மாநிலத்துக்கே முதல் உரிமை: இந்தியா இலங்கையோடு நிற்கிறது” என்ற இந்திய கொள்கையின் நீட்சிதான் இந்த புதன்கிழமை நிதி உதவி என்று வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் விவரித்தார். அப்படி விவரிக்கும்போது அவரது மனதில் தமிழர்களின் நலனும் இருந்தது. “தமிழரான ஜெய்ஷங்கர் கொழும்புவில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் 1988 முதல் 1990 வரை பணியாற்றியிருக்கிறார். அங்கு உள்ள வலிகளும் பிரச்னைகளும் அவருக்குப் புரியும்” என்று என் லண்டன் நண்பருடன் வாதாடினேன்.

பிறகு அவரிடம் ஒரு கேள்வியை வீசினேன். “உங்களது ஈழத் தலைவர்களிடம் பேசி அவர்களின் ஒற்றுமைக்கும் நீங்கள் செயல்படவேண்டுமில்லையா?” என்றேன். ஒற்றுமை பற்றிய இந்தக் கேள்வியை நான் கேட்கும்போதெல்லாம் உடனே ஈழ நண்பர்களிடமிருந்து வரக்கூடிய அதே பதிலை அவரும் கூறினார். “ஜனநாயக அமைப்பில் சில வேற்றுமைகள் வரும், ஒரு பிரச்னை என்றால் எல்லாரும்

(14 ஆம் பக்கம் பார்க்க....)

# உக்ரைன் வான் எல்லையை பாதுகாக்கும் ஆயுதம்!

**இதுவரை 20 ரஷ்ய போர் விமானங்கள் மேன்பேட்ஸை வைத்து அழிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. உக்ரைன் இராணுவம் வெளியிட்ட தகவலின்படி இதுவரை 86 ரஷ்ய போர் விமானங்களும், 108 ஹெலிகாப்டர்களும் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. ரஷ்ய இராணுவம் இதுவரை இதுதொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை.**






உக்ரைன் மீதான தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகிறது ரஷ்ய ராணுவம். நேட்டோ அமைப்பில் சேராமல் விட்டுவிடுகிறோம் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அறிவித்த போதிலும்கூட போரை நிறுத்தாமல் தொடர்ந்து தாக்குதலை தொடுத்து வருகிறது ரஷ்யா.

சமீபத்தில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி காணொலி காட்சி வழியாக உரை ஆற்றினார்.

அப்போது அவர் எங்களுக்கு உங்கள் உதவி இப்போது தேவை என்று உருக்கமாக கூறினார். இதனைத் தொடர்ந்து 800 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அளிக்க அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டார்.

ரஷ்யாவின் தாக்குதலை சமாளிப்பதற்காக அதிநவீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நிலத்திலிருந்து வானில் தாக்கி எதிரிகளின் ஏவுகணைகளை அழிக்கும் ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தி வருகிறது.

இந்த அதிநவீன ஏவுகணைகளை அமெரிக்கா அளித்து வருகிறது. அத்துடன், சக்திவாய்ந்த ரஷ்ய இராணுவ டாங்கிகளையும், போர் விமானங்களையும் இடைமறித்து அழிக்கும் இராணுவ உபகரணங்களையும் மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு வழங்கி வருகிறது.

இதில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் என்ன? இது எப்படி பயன்படுத்தப்படுகிறது? உக்ரைனுக்கு இதுவரை இந்த ஏவுகணைகள் எப்படி பயன்பட்டன? என்பதை இந்தக் கட்டுரையில் அலசுவோம்.

போர் விமானங்களை இடைமறித்து அழிக்கும் தடுப்பு ஆயுதத்தை ஆங்கிலத்தில் MANPADS என்று அழைக்கிறார்கள்.

**MANPADS என்றால் என்ன?**

ஆளில்லா விமானங்களான ட்ரோன்கள், ஆயுதங்கள், 800 ஸ்டிரிங்கர்கள் அதாவது, வீரர்கள் கையில் எடுத்துச் செல்லக் கூடிய வான் பாதுகாப்பு கருவி (MANPADS), சிறிய ரக ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் வல்லமைப் படைத்த கருவிகள் உள்ளிட்டவற்றை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி வருகிறது.

ஏற்கனவே 600க்கும் அதிகமான ஸ்டிரிங்கர்களை உக்ரைனுக்கு அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது. உக்ரைன் எல்லையில் உள்ள ஈஸ்டோனியா, லிதுவேனியா, லாத்வியா ஆகிய நாடுகளையும் உக்ரைனுக்கு ஸ்டிரிங்கர்களை வழங்குமாறு அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

ஜெர்மனி, நார்வே, நெதர்லாந்து போன்ற நாடுகளும் இதை அனுப்பியுள்ளன. இது குறிப்பிட்ட உயரத்தில் குறைந்த அளவிலான இலக்கில் எதிரிகளின் ஏவுகணைகளை இடைமறித்து அழிக்க உதவும் ஆயுதம் மேன்பேட்ஸ் ஆகும். இராணுவ வீரர்கள் இந்த ஆயுதத்தை தோள்பட்டையில் எளிதாக வைத்துக் கொண்டு இலக்கை குறிவைத்து தாக்கலாம்.

மேன்பேட்ஸை அமெரிக்கா வடிவமைத்தது. அகச்சிவப்பு கதிர்களை கொண்டு எதிரி ஏவுகணையை இடைமறித்து தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. ஆளில்லா விமானங்கள், போர் விமானங்கள் ஆகியவற்றை இதைப் பயன்படுத்தி வீழ்த்த முடியும்.

ரஷ்யாவின் இக்லா-எஸ் ஏவுகணைகளுடன் இதனை ஒப்பிடலாம். மேன்பேட்ஸ் வான்வழியாக வரும் எதிரி போர் விமானங்களையும், ஆளில்லா விமானங்களையும் தாக்கி அழித்துவிடும்.

தரைவழியாக தாக்குதல் நடத்தவரும் டாங்கிகளையும் கவச வாகனங்களையும் அகச்சிவப்பு கதிர் சென்சார் மூலம் இடைமறித்து அழிக்கும் ஆயுதத்தையும் அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கியுள்ளது. தோள்பட்டையில் வைத்து பயன்படுத்தும் இலகுரக ஆயுதங்களை உக்ரைனுக்கு இங்கிலாந்து வழங்கியுள்ளது.

ஸ்வீடன் மற்றும் இங்கிலாந்து கூட்டு தயாரிப்பில் இந்த ஆயுதம் உருவானது. அகச்சிவப்பு சென்சார் இல்லை என்றாலும் எடுத்துச் செல்ல எளிதாக இருக்கும்.

**உக்ரைனுக்கு எவ்வாறு உதவியது?**

வான்வழியாக உக்ரைனை ரஷ்யா தாக்கி விடாமல் தடுத்துவருவதில் இந்த மேன்பேட்ஸ் முக்கிய பங்காற்றியிருக்கிறது. ரஷ்யாவின் வான்வழித் தாக்குதலின் வீரியத்தை இது குறைத்து விடுகிறது. இதை அதிக எண்ணிக்கையில் வைத்துக் கொண்டு ரஷ்ய இராணுவத்தை வீழ்த்திவிட முடியாது.

இருப்பினும்,ரஷ்யாவுக்கு இழப்பை ஏற்படுத்த முடியும் என்று உக்ரைனின் கிவிவ் நகரில் உள்ள புள்ளியியல் கல்வித் துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

சர்வதேச ஊடகச் செய்திகளை பார்க்கும்போது இதுவரை 20 ரஷ்ய போர் விமானங்கள் மேன்பேட்ஸை வைத்து அழிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. உக்ரைன் இராணுவம் வெளியிட்ட தகவலின்படி இதுவரை 86 ரஷ்ய போர் விமானங்களும், 108 ஹெலிகாப்டர்களும் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

ரஷ்ய இராணுவம் இதுவரை இதுதொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை. செயின் ஜாவ்லின் என்ற டாங்கி அழிப்பு ஆயுதத்தை கொண்டு இதுவரை ரஷ்யாவின் 444 டாங்கிகளை உக்ரைன் அழித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் போரில் செயின் ஜாவ்லின் அதிக பங்காற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**மேன்பேட்ஸ் போதுமானதாக இருக்கிறதா?**

இல்லை என்பதே பதில். உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் அதையே தெரிவித்திருக்கிறார். அமெரிக்காவிடமும், மேற்கத்திய நாடுகளிடமும் அவர் மேலும் ஆயுதங்களை கோரியிருக்கிறார்.

ரஷ்ய தயாரிப்பான எஸ்-300 ரக ஆயுதங்களை அனுப்ப அமெரிக்கா முயற்சி எடுத்து வருகிறது. ஏனென்றால் இதை உக்ரைன் ராணுவத்தினர் பயன்படுத்துவது எளிதானதாக இருக்கும். மேலும், அதுகுறித்து அவர்கள் ஏற்கனவே அறிந்தும் வைத்திருக்கிறார்கள்.

மேன்பேட்ஸ் வரலாறை சுருக்கமாக பார்ப்போம். முதல்முறையாக அமெரிக்கா இதை தயாரித்தது.

1968 ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இதன் மேம்படுத்தப்பட்ட வடிவம் 1970 காலகட்டத்தில் வெளியிடப்பட்டது. ஆப்கனில் முஜாஹிதீனிடம் அவை வழங்கப்பட்டது. முஜாஹிதீன் சோவியத் போர் விமானங்களை எதிர்த்து சண்டையிட்டது.

சோவியத்தும் ஸ்ட்ரெலா மற்றும் இக்லா என்ற மேன்பேட்ஸை தயாரித்தது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, ஸ்வீடன், வடகொரியா, போலந்து உள்பட 20 நாடுகள் மேன்பேட்ஸை தயாரிக்கிறது.

எனினும், மேன்பேட்ஸ்கள் அல்-காய்தா போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு சட்டவிரோதமாக அனுப்பப்படுவதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை எச்சரிக்கை விடுத்து வருகிறது.

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேன் மறைவுக்கு பிறகு அந்நாட்டில் இருந்து 4,000 மேன்பேட்ஸ்கள் காணாமல் போனதாக அமெரிக்க அதிகாரிகள் குற்றம்சாட்டினர்.

பயங்கரவாத அமைப்புகளின் கைகளுக்கு மேன்பேட்ஸ் செல்வது ஆபத்தானது என்று அமெரிக்க எச்சரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**- இந்தியன் எக்ஸ்பிரஸ்**



# உக்ரைன் தலைநகர் கிவ்வில் ‘ஸ்னைப்பர் வாலி’ நடமாட்டம்

**பேச்சுவார்த்தைகளைக் காரணம் காட்டி உக்ரைனை மந்த நிலையில் வைத்துக் கொண்டு ரஷ்யா உக்ரைன் தலைநகர் கீவ் நோக்கி மெதுவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அதேபோல உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் நகரத்தின் மீதும் கடும் தாக்குதல் இடம் பெற்றது.**



**குரு அரவிந்தன்**

யார் இந்த சினைப்பர் வாலி? என்பது உங்களுக்கு ஆச்சரியம் தரலாம். கனடாவின் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரரான ‘ஸ்னைப்பர் வாலி’ என்ற புனைப் பெயரைக் கொண்ட இவர் கனடாவின் 22வது படைப்பிரிவில் 12 வருடங்கள் கடமையாற்றியவர். உக்ரைனின் அழைப்பை ஏற்று 40 வயதான கணனி மென்பொறியியலாளரான இவர் அங்கு சென்று சுயவிருப்பத்தின் பெயரில் படையில் இணைந்திருக்கின்றார்.

ஸ்னைப்பர் மூலம் யாரையும் குறிபார்த்து வீழ்த்துவதில் வல்லவர். ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா போன்ற நாடுகளில் சேவையாற்றிபோது, ஸ்னைப்பர் தாக்குதலுக்குப் புகழ் பெற்றவர். ஒரு நாளில் சாதாரணமாக ஒரு ஸ்னைப்பர் வீரனால் ஐந்து அல்லது ஆறு பேரைத்தான் சுட்டு வீழ்த்த முடியும். ஆனால் இவர் ஒரே நாளில் 40 பேரைச்சுட்டு வீழ்த்தக்கூடிய வல்லமை படைத்தவர் என்ற புகழாரம் சூட்டப்பட்டவர். இப்போது உக்ரைனுக்கு உதவும் நோக்கத்தோடு, ரஷ்ய படையினருக்காகத் தலைநகரான கீவ்வில் தனது 338 ஸ்னைப்பர் ரைபிளுடன் வீதியில் காத்திருக்கின்றார். இவரைப் போலவே, பிரபல டென்னிஸ் வீரரான சேர்ஜி ஸ்ராகேவஸ்கியும் உக்ரைன் இராணுவத்தில் இணைந்திருக்கின்றார்.

உக்ரைன் - ரஷ்ய யுத்தம் ஆரம்பித்து 22 நாட்கள் கடந்துவிட்டன. சென்ற பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ரஷ்யாவால் இந்த இந்த யுத்தம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ரஷ்யா நாட்டின் மீது எந்தத் தாக்குதலும் இதுவரை நடக்காதபடியால், யுத்தம் உக்ரைன் நாட்டில் நடப்பதால், இந்த யுத்தத்தில் உக்ரைன் மக்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

கடந்த வாரம் ஐரோப்பிய ஒன்றிய போலாந்து நாட்டுப் பிரதமர், செக் குடியரசுப் பிரதமர், ஸ்லோவேனியா பிரதமர் ஆகியோர் உக்ரைனுக்கு சென்று, அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி உக்ரைன் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினார்கள். உக்ரைன் தலைநகரான கீவ்வில் இந்த சந்திப்பு இடம் பெற்றது. ஒரு வாரத்தில் முடிந்திருக்க வேண்டிய யுத்தம், நேசநாடுகள் உக்ரைனுக்கு உதவியதால் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இதே நேரம் உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா தனது தாக்குதல்களை அதிகரித்து இருக்கின்றது. தலைநகரான கீவ்வையும், இரண்டாவது பெரிய நகரான கார்கிவ்வையும் கைப்பற்றினால் உக்ரைன் பலமிழந்து விடும் என்ற கணிப்பில் இந்தத் தாக்குதல்கள் ரஸ்யாவால் மேற்கொள்ளப் படுகின்றன.

இது இப்படி இருக்க, பேச்சுவார்த்தைகளைக் காரணம் காட்டி உக்ரைனை மந்த நிலையில் வைத்துக் கொண்டு ரஷ்யா உக்ரைன் தலைநகர் கீவ் நோக்கி மெதுவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அதேபோல உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் நகரத்தின் மீதும் கடும் தாக்குதல் இடம் பெற்றது. இதன் காரணமாக இந்த நகரங்களில் இப்போது ஊரடங்கு அமல் நடத்தப்படுகின்றது.

கார்கிவ் நகரத்தில் மட்டும் சுமார் 600 கட்டிடங்கள் தரைமட்டமாக்கப் பட்டிருக்கின்றன. 500 மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். பெருந்தொகையான கவசவாகனங்களை ரஸ்யா இழந்திருப்பதால், ரஸ்யாவின் ஏவுகணைத்தாக்குதலையும், விமானத் தாக்குதலையும் முறியடிக்கக் கூடிய வசதிகள் இதுவரை உக்ரைனிடம் இல்லை என்பதால், ரஸ்யா இத்தகைய வான்தாக்குதல்களையே இப்போது மேற்கொள்கின்றது.

சென்ற புதன் கிழமை மிகச்சக்தி வாய்ந்த குண்டுகளைத் தலைநகர் கிவ் மீதும், கார்கிவ் மீதும் ரஷ்யா பயன்படுத்தியிருந்தது. உக்ரைனின் விமான உற்பத்தித் தொழிற்சாலையும் இதுபோன்ற குண்டு வீச்சுத் தாக்குதல்களால் அழிக்கப்பட்டிருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் எப்படித் தந்திரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சுற்றிப்பிடித்தார்களோ அதே நிலைதான் உக்ரைன் தலைநகருக்கு ஏற்படப்போகின்றது.

அரசியல்வாதிகளும், ஆயுத விற்பனையாளர்களும் உல்லாசம் அனுபவிக்க, காணாமல் போனவர்கள் எல்லாம் எங்கே என்றதொரு அவலநிலை உக்ரைன் நாட்டில் ஏற்படப் போவதால், உறவுகள் எங்கே என்று தேடித் தெருத் தெருவாகப் பதாகை பிடிக்கும் நிலை அந்த நாட்டிலும் நாளை ஏற்படத்தான் போகின்றது. அன்று இதே உக்ரைன்தான் தனது விமானிகளை இலங்கைக்கு உதவியாகக் கொடுத்து, வன்னியில் குண்டுமாரி பொழிய உதவியிருந்ததும் சுட்டிக்காட்டத்தக்கது. இப்போது விலாங்குமீன் மாதிரி இலங்கை நழுவப் பார்ப்பதால், இலங்கையில் உள்ள சில வெளிநாட்டுத் தூதுவர்கள் உக்ரைனுக்கு ஆதரவளிக்கும்படி இலங்கையைக் கூட்டாகக் கேட்டிருக்கிறார்கள்.

உக்ரைனுக்கு உதவ முற்படும் நாடுகள் ஆயுதங்களை உக்ரைனுக்குக் கொண்டு வர முயற்சி செய்தால், ஆயுதங்களைக் காவிச் செல்லும் வாகனத் தொடரணிகள், கப்பல்கள், விமானங்கள் போன்றவை தாக்கப்படும் என்று ரஸ்யா எச்சரிக்கை விட்டிருக்கின்றது. இதற்கிடையே மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை திங்கட்கிழமை நடைபெற்றது. ஆடத்தெரியாதவன் அரங்கு பிழை என்று குற்றம் சாட்டியது போல, இந்தப் பேச்சுவார்த்தைகள் மனசுத்தியோடு நடைபெறவில்லை. இது உலக நாடுகளுக்கான ஒரு கண்துடைப்புத்தான். இன்னுமொன்று தங்களை இன்னும் பலப்படுத்திக் கொள்ள எடுத்துக் கொள்ளும் கால அவகாசம்தான் இது.

எப்பொழுதுமே இரண்டு பக்கம் என்று வரும்போது, தொடர் பேச்சுவார்த்தைகளின் போது பலவீனமானவர்கள் எப்பொழுதும் அடித்து வீழ்த்தப்பட்டதாகவே வரலாறு இருக்கின்றது. இஸ்ரேல் தலைநகரில் ரஸ்யா - உக்ரைன் சந்திப்பை ஏற்படுத்தவும் முயற்சிகள் நடைபெற்றன. உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியைச் சந்திக்க ரஸ்ய அதிபர் புதின் மறுத்து விட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நடந்த பல பேச்சுவார்த்தைகளும் இப்படித்தான் இழுத்தடித்து, கடைசியில் எப்படி முடிந்தது என்பது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கிறது. அதே தந்திரம்தான் இங்கேயும் பாவிக்கப்படுகின்றது. ‘எரியிற நெருப்பில பிடிங்கியது லாபம்’ என்ற நிலையில்தான் எல்லா நாடுகளும் இருக்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், மற்றும் நேட்டோ நாடுகள் உக்ரைனுக்கு உதவ முன்வந்திருக்கின்றன. அந்தவகையில் ஒரு தொகை ஆயுதங்களை உக்ரைனுக்கு ஏற்கனவே அனுப்பியும் இருக்கின்றன. இதில் முக்கியமாக அமெரிக்கா அனுப்பிய கவசவாகனங்களை அழிக்கும் ஆயுதங்களும் இடம் பெற்றிருந்தன. வியாழக்கிழமையும் மேற்கொண்டு பல ஆயுதங்களை அனுப்பியதாக அமெரிக்கா அறிவித்தது.

இந்த ஆயதங்கள் எலக்ரோனிக் சாதனங்கள் மூலம் இயங்குவதால், மிக இலகுவாகத் தனி ஒரு இராணுவ வீரனால் மறைந்திருந்து இயக்கக் கூடியதாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றது. தோளிலே வைத்துக் கொண்டு கவசவாகனத்தை நோக்கி ஏவினால் குறிதவறாமல் அடிக்கக்கூடியவகையில் அது அமைந்திருக்கின்றது. கடந்த ஒரு வாரமாகப் பெருமளவில் ரஸ்யாவின் கவசவாகனங்கள் அழிக்கப்பட்டதற்கு இதுவே காரணமாகும். கவசவாகனங்களுக்கு எதிர்ப்பு இருக்காது என்ற எண்ணத்தில் ரஸ்யா ஏராளமான கவச வாகனங்களை உக்ரேனுக்குள் அனுப்பி இருந்தது.

இதே சமயம் ரஷ்யாவின் எல்லை நாடான, நேட்டோ நாடுகளின் அங்கத்துவ நாடான போலாந்து நாட்டிற்கு அதன் பாதுகாப்பிற்காக அமெரிக்கா இரண்டு நவீன விமான எதிர்ப்பு ஏவுகணை இயக்கிகளைக் கொடுத்திருக்கின்றது. 1982 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட இந்த விமான எதிர்பு ஏவுகணை இப்போது நவீன மயப்படுத்தப் பட்டிருக்கின்றது. ஈராக், குவைத், சவூதி அரேபியா போன்ற நாடுகளில் இதுபோன்ற ஏவுகணை முன்பு பாவிக்கப்பட்டது.

கடந்த 23 வருடங்களாக போலாந்து நேட்டோவில் அங்கத்தவராக இருப்பதால், தனது எல்லையில் நேட்டோ படைகள் குவிக்கப்படுவதையும் ரஷ்யா விரும்பவில்லை என்பதும் ஒரு காரணமாகும். அதனால் பெலாரஸில் ரஸ்யா தனது படைகளைக் குவித்திருக்கின்றது. விமானத்தாக்குதல் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் போன்றவற்றில் இருந்து இந்த ஏவுகணை நாட்டைக் காப்பாற்றக்கூடியது. இரண்டாம் உலகயுத்தத்திற்கு முன்பாகப் போலாந்து ரஸ்யாவின் கட்டுப்பாட்டுக்குள்ளேதான் இருந்தது. எனவே மீண்டும் போலாந்திற்குள் ரஷ்யா நுழையலாம் என்ற சந்தேகமும் இருக்கின்றது. இதற்கிடையே உக்ரைன் மீதான ராணுவநடவடிக்கைகளை நிறுத்துமாறு சர்வதேச நீதிமன்றம் ரஷ்யாவுக்கு உத்தரவிட்டிருக்கின்றது.

காணொளி மூலம் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உக்ரைன் ஜனாதிபதி உரையாற்றினார். உக்ரைனுக்கு உதவும்படியும், உக்ரைன் வான் பரப்பைத் தடை செய்யும் படியும் அப்போது அவர் கேட்டுக் கொண்டார். நெட்பிளிக்ஸ் நிறுவனம் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி 2015 ஆம் ஆண்டு ஆசிரியராக நடித்த தொலைக்காட்சித் தொடரை அமெரிக்காவில் மீண்டும் ஒளிபரப்ப இருக்கிறார்கள்.

உக்ரைன் நாட்டில் இருந்து யுத்தம் காரணமாக 2,505,000 மக்கள் இதுவரை அகதிகளாக வெளியேறி இருக்கிறார்கள். இவர்களில் 1,525,000 மக்கள் அகதிகளாப் போலாந்து நாட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். அமெரிக்கா ரஸ்யாவுக்கு எதிராகவும், ரஸ்ய ஜனாதிபதி புதினுக்கு எதிராவும் பொருளாதாரத் தடை விதித்ததால், இப்போது பதிலடியாக ரஷ்யாவால், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு எதிராகவும், முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிங்டனுக்கு எதிராகவும் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இவர்கள் யாருமே ரஷ்யாவுக்குப் போகப்போவதுமில்லை, அதனால் அவர்களுக்கு இதைப்பற்றிய கவலையுமில்லை!


ஈழநாடு



# இயந்திரக் கற்றல் எப்படி நடைபெறுகிறது?

**மனித சக்தியை மீறி வானியல், புவியியல் உள்ளிட்ட பல்வேறு அறிவியல் துறைகளிலும் பல்வேறு சோதனைகள் நடத்தப்படுகின்றன. அவை வெற்றிபெற வேண்டுமென்றால், ஏற்கெனவே தோல்வியைத் தழுவிய முந்தைய சோதனை முடிவுகளை எடுத்து ஆராய்ந்து பார்த்தால்தான் சாத்தியமாகும்.**


**க. சண்முகம்**




இன்றைய கணினித் தொழில்நுட்ப வளர்ச்சியில் எங்கும் எதிலும் கேட்கக்கூடிய ஒரு சொல் 'இயந்திரக் கற்றல்' (machine learning). இயந்திரக் கற்றல் என்றால் இயந்திரமே தானாகக் கற்றுக்கொள்ளுமா என்ற கேள்வி பலருக்கும் எழலாம்.

மனிதர்கள் ஒரு செயலைத் திரும்பத்திரும்பச் செய்துபார்த்து, அதில் உள்ள தவறுகளைத் திருத்திக்கொண்டு அந்தச் செயலை மிகச் சரியாகச் செய்ய ஆரம்பிக்கிறோம். அதுபோல, நம்முடைய இயந்திரத்துக்கும் கணினிக்கும் நாம் கற்றுக்கொடுத்து, அதன் அடிப்படையில் நாம் கேட்கும் கேள்விக்கு அவற்றைச் சரியான பதில் அளிக்க வைப்பதுதான் இயந்திரக் கற்றல்.

நாம் பிறக்கும்போது நமக்கு எந்தச் செயலையும் செய்யத் தெரியாது. காலம் செல்லச்செல்ல பிறரின் உதவியுடன் சில செயல்களைச் செய்ய ஆரம்பிப்போம். முதலில் நாம் கால், கைகளின் உதவியுடன் நடக்க ஆரம்பிப்போம். பிறகு, யாருடைய உதவியும் இல்லாமல் நடக்க ஆரம்பிப்போம். நாம் எவ்வாறு அனுபவத்தோடு வளர்கிறோமோ அதேபோல் கணினிக்கும் அல்லது இயந்திரத்துக்கும் கற்றுக்கொடுத்து, அந்த அனுபவங்களின் அடிப்படையில் அதனை வேலைசெய்ய வைப்பதே இயந்திரக் கற்றல். சுருக்கமாகக் கூறினால், சேமித்து வைத்திருக்கும் தகவலின் அடிப்படையில் நாம் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறுவதுதான் இயந்திரக் கற்றல். இருக்கிற தகவல் என்பதுதான் இயந்திரத்தின் செயலாக்கத் தரவு. கேள்விகளுக்குப் பதில் தருவதுதான் முன்கணித்தல் என்பதாகும்.



உதாரணமாக, கணினிக்கு முதலில் சில படங்களைக் காண்பித்துப் பயிற்சி கொடுக்க வேண்டும். இயந்திரமானது அந்தப் படத்தில் உள்ள தனிச்சிறப்புகளையும் மாதிரியையும் சேமித்து வைத்து, மறுபடியும் நாம் அந்தப் படத்தைக் காண்பிக்கும்போது சேமித்து வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் அதைப் பற்றிய தெளிவான பதிலை அளிக்கும். எடுத்துக்காட்டாக, மனிதர்கள், நாய்களின் படங்களை இயந்திரத்துக்குக் கற்றுக்கொடுத்துவிட்டோமானால், அவற்றில் உள்ள தனிச்சிறப்புகள் (உதாரணமாக, நாய்க்கு வால் இருக்கும், மனிதர்களுக்கு நீண்ட கால்கள் இருக்கும்) என்கிற தகவல்களைச் சேமித்து வைத்துக்கொள்ளும். இதன் அடிப்படையில், நாம் மீண்டும் அந்தப் படங்களைக் காண்பிக்கும்போது இது நாய், இது மனிதர் என்று அதன் தனிச்சிறப்புகளின் அடிப்படையில் பதில் அளிக்கும்.

வலையொளியில் நீங்கள் ஒரு தகவலைத் தேடும்போது அதற்கு நிகரான தகவல்கள் ஓரமாக நிறைய வந்து நிற்கும். இது உங்கள் எண்ணத்துக்கு ஏற்றவாறு நீங்கள் இதைத்தான் தேடுகிறீர்கள் என்பதையும், உங்களுக்குப் பிடித்ததையும் தெளிவாக இணையம் காண்பிக்கும். இயந்திரக் கற்றலுக்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. கிணற்றைத் தோண்டத் தோண்ட தண்ணீர் ஊற்றெடுப்பதுபோல நாம் படிக்கப்படிக்கத்தான் நமக்கு அறிவு வளரும். அதுபோல, இயந்திரத்துக்குக் கற்றுக்கொடுக்கக் கற்றுக்கொடுக்க மிகத் துல்லியமாக நமக்குத் தேவையான பதிலைத் தரவோ செயலை ஆற்றவோ இயந்திரத்தால் இயலும்.

மனிதர்கள் செய்யும் வேலையை வெறும் நிரல்கள் (Programming) எழுதிக் கணினி மூலமாகச் செய்யவைப்பது இயந்திரக் கற்றல் ஆகாது. அதன் பெயர் தானியக்கம் (Automation). இதை இன்னும் எளிமையாகக் கூறலாம். வாகனம் ஓட்டுவது, ஒருவருடைய குரலைக் கேட்டே ஆளைக் கணிப்பது போன்றவையெல்லாம் ஒருவர் தன்னுடைய அனுபவ அறிவாலும், புத்திக்கூர்மையாலும் செய்யக்கூடியவை. இவற்றுக்கெல்லாம் நேரடியாக நிரல்கள் எழுதிக் கணினிக்குச் சொல்லித்தர முடியாது. அந்த அனுபவத்தையும் அறிவையும் கொடுத்துத்தான் நாம் கணினியைப் பழக்க வேண்டும்.

மனிதர்களைப் போன்று கணினிகளை யோசிக்க வைத்து, முடிவுகளையும் அவற்றையே எடுக்க வைப்பது, அவ்வாறு எடுக்கப்படும் முடிவுகள் இயந்திரத்தனமாக அல்லாமல், அறிவின் அடிப்படையில் அமைவதற்கு என்னென்ன செய்ய வேண்டும், அவ்வாறு யோசிக்க வைப்பது எவ்வாறு சாத்தியப்பட்டது, அதிலுள்ள வழிமுறைகள் என்ன, கோட்பாடுகள் என்னென்ன என்பது போன்ற அனைத்தையும் விளக்குவதே இயந்திரக் கற்றல் என்பதாகும். இயந்திரங்களுக்குக் கற்பிப்பது என்பது விலங்குகள் எவ்வாறு கற்கின்றன என்பதை அடிப்படையாக வைத்தே ஆராயப்பட்டது.

மனித சக்தியை மீறி வானியல், புவியியல் உள்ளிட்ட பல்வேறு அறிவியல் துறைகளிலும் பல்வேறு சோதனைகள் நடத்தப்படுகின்றன. அவை வெற்றிபெற வேண்டுமென்றால், ஏற்கெனவே தோல்வியைத் தழுவிய முந்தைய சோதனை முடிவுகளை எடுத்து ஆராய்ந்துபார்த்தால்தான் சாத்தியமாகும். உதாரணத்துக்கு, மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால், முன்பெல்லாம் பிரசவத்தின்போது பெண்களின் இறப்பு விகிதம் என்பது பாதிக்குப் பாதியாக இருந்தது. இதனைக் குறைப்பதற்கு பிரசவத்தின்போது இறந்த கோடிக்கணக்கான பெண்களின் ஆய்வறிக்கைகளை எடுத்துப் பார்க்க வேண்டியிருந்தது. அவற்றுள், ஒவ்வொரு பெண்ணும் ஏன் இறந்தார், எத்தனை பெண்கள் ஒரே வகையான காரணத்தால் இறந்திருக்கிறார்கள், எந்த வகையான காரணங்கள் இறப்புக்கு வழிவகுக்கின்றன என்பது போன்ற விஷயங்களையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும்.

இதெல்லாம் மனித சக்தியால் செய்ய முடியுமா? மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல்தான் என்பது நிதர்சனமான உண்மை. ஆகவே, இதைச் செய்வதற்குக் கணினிகளைப் பழக்கி, ஒரே மாதிரியான அம்சங்கள் மற்றும் முறைகளில் இருக்கும் தரவுகளைக் கண்டுபிடிக்கின்றனர். பின்னர், அவற்றை மருத்துவ வல்லுநர்கள் பரிசீலித்து, இறப்புக்கு வழிவகுக்கும் காரணிகள் எவையென்று கண்டறிகின்றனர். இதன் அடிப்படையில்தான், வருகின்ற ஒவ்வொரு கர்ப்பிணியிடமும் இவற்றில் ஏதேனும் ஒன்று தென்பட்டால்கூட உடனே அறுவைசிகிச்சை செய்துவிடுகிறார்கள். ஆகவேதான், தற்போது பெரும் எண்ணிக்கையிலான பெண்களுக்கு அறுவைசிகிச்சை செய்யப்பட்டு, இறப்பு விகிதமும் முழுவதுமாகக் குறைந்துவிட்டது.

இதுபோன்ற பல செயல்பாடுகளுக்கு இயந்திரக் கற்றல் தொழில்நுட்பம் பயன்படுகிறது. எனினும், மனித அறிவை இயந்திரங்கள், கணினிகள் விஞ்சுவதால் ஏற்படக்கூடிய ஆபத்துகளைக் குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

- இந்து

# பதவி உயர்வு பெற கைகொடுக்கும் உத்திகள்!

**பதவி உயர்வு பற்றி அலுவலகங்கள் பணிபுரியும் ஊழியர்களுக்குப் பல விதமான ஆத்திரமான எண்ணங்கள் இருக்கும். 'அவனுக்கு ஒன்றும் தெரியாது. அவனுக்கெல்லாம் பதவி உயர்வு கிடைக்குது. எனக்குக் கிடைக்க மாட்டேன் என்கிறதே' எனச் சிலர் வாய்விட்டுப் புலம்புவதையும், இன்னும் சிலர் மனதில் புகைந்துகொண்டிருப்பதையும் நாம் தினம் தினம் பார்க்கலாம். பதவி உயர்வைப் பெற நீங்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்பது பற்றித் தெளிவாக விளக்கி எழுதப்பட்டிருக்கும்.**




"வெறுமனே நன்கு வேலை செய்வதோ, கஷ்டப்பட்டு உழைப்பதோ பதவி உயர்வுக்கு வழிவகை செய்யாது, பதவி உயர்வுகள் எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது என்பது குறித்தும், நீங்கள் எந்தப் படிநிலையில் இருந்தாலும் படிப்படியாக முன்னேறி பதவி உயர்வை அடைவது எப்படி என்பது குறித்தும் விளக்கமாகச் சொல்வது தான் இந்தப் புத்தகத் தின் நோக்கம்" என்கிறார் இப்புத்தகத்தின் ஆசிரியை.

**தவறான எண்ணங்களை நீக்குங்கள்...**

பதவி உயர்வு குறித்து நாம் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லும் ஆசிரியர் அதற்கான காரணங்களைப் பட்டியல் இடுகிறார்.

**1. கடுமையாக உழைத்தால் பதவி உயர்வு கிடைக்கும்...**

கஷ்டப்பட்டு அதிக நேரம் உழைத்து நம்முடைய உயரதிகாரியின் பார்வையில் பட்டு அவருடைய மனம் குளிர்ந்தால் பதவி உயர்வு என்பது கிடைத்துவிடும் என்று நாம் நினைப்போம். கஷ்டப்பட்டு உழைப் பவருக்குத் தான் பதவி உயர்வு கிடைக்கும் என்பது ஊக்குவித்தல் (Motivation) என்ற அடிப்படையில் செய்யப்படும் ஏமாற்று வேலை ஆகும்.

ஏனென்றால், பதவி உயர்வு என்பது கஷ்டப்பட்டு உழைத்ததற்காகத் தரப்படுகிற பரிசல்ல. உங்களுடைய நேரடியான மேலதிகாரியும், அவருடைய மேலதிகாரிகளும் உங்களுக்கு எதிர்காலத்தில் தரப்படும் பொறுப்புகளைச் சிறப்பாகக் கையாளும் திறமை இருக்கிறது என்று நம்பும் சூழலிலேயே உங்களுக்கு பதவி உயர்வு தரப்படுகிறது. இன்றைய பணியைத் திறம்பட செய்வதற்காகத் தரப்படும் பரிசு அல்ல பதவி உயர்வு என்பது.

**2. சிறந்த பணியாளருக்குத்தான் பதவி உயர்வு கிடைக்கும்...**

இது பெரும்பாலான சமயங்களில் நடப்பதே இல்லை என்பதே நிஜம். நம்ப முடியவில்லையா? உங்களுடைய மேலதிகாரி மற்றும் அவருடைய மேலதிகாரிகள் போன்றவர்களைக் கொஞ்சம் உங்கள் மனக்கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்துங்கள். அவர்கள் அனைவருமே ஆய கலைகள் அறுபத்தி நான்கிலும் தலைசிறந்த திறமை கொண்டவர்களாக இருக்கிறார்களா என்ன? நிறுவனங்கள் எப்போதும் தகுதி மற்றும் திறமையை முன்னிறுத்தி மட்டுமே செயல்படுவதில்லை / முடிவுகளை எடுப்பதும் இல்லை. அலுவலக அரசியல் என்பது இதில் முன்னிலை வகிக்கவே செய்யும். பதவி உயர்வுக்கு உங்களுக்கு என்ன தெரியும் என்பது முக்கியமில்லை. உங்களுக்கு யாரைத் தெரியும் என்பதுதான் முக்கியம் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள்.

**3. பதவி உயர்வுக்கான செயல்பாடுகள் மிக நேர்மையாக நடக்கும்...**

உங்கள் நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டுப் பிரிவு பாகுபாடின்றி செயல்படும் என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால், பொருளாதார வளர்ச்சி மட்டுப்பட்டால் இவ்வளவு பேருக்கு பதவி உயர்வு கொடுத்து அதனால் வரும் செலவினங்கள் எல்லாம் கட்டுப்படியாகுமா என்கிற கேள்வியை ஒருபுறமும் இவருக்குப் பதவி கொடுத்தால், இவர் திருப்திப்படுவார் அல்லது இவருக்குத் தராவிட்டால் டென்ஷனாகிவிடுவார் என்பது போன்ற அலுவலக அரசியல் சூழலுமே மனிதவள மேம்பாட்டுப் பிரிவின் செயல்பாட்டுக்கு பெரும்பாலான சூழ்நிலைகளில் அடித்தளமாக இருக்கின்றன.

உங்களுக்குப் பதவி உயர்வு கிடைத்தாலுமேகூட (ஏற்கெனவே கிடைத்திருந்தாலும்) அது வெறும் திறமையால் மட்டுமே வந்தது என்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள். உங்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ வேறு சில வெளியே சொல்ல முடியாத காரணங்களும் இருக்கவே செய்யும். பதவி உயர்வுக்காக உங்களுடைய செயல்பாடுகளை மாற்றிய மையுங்கள். அது ஒரு நல்ல விஷயம். அதே சமயம் பதவி உயர்வுக்காக நீங்கள் ஆக்ரோஷமான நபராக மாறிவிடாதீர்கள்.

உதாரணமாக, கடினமாக உழைப்பது, மற்றவர்களுடைய பார்வையில் உங்களுடைய உழைப்பும் பங்களிப்பும் படுவதைப்போல் நடந்துகொள்வது போன்றவையெல்லாம் சரியான செயல்பாடுகளே. அதே நேரத்தில், 'எனக்குப் பதவி உயர்வு தராவிட்டால் நான் வேலையை விட்டு சென்றுவிடுவேன்' என்று கூற ஆரம்பித்தீர்கள் எனில், உங்களுடைய மேலதிகாரி நினைத்தாலுமே உங்களுக்கு உதவ முடியாது. அப்படியெனில், அடங்கிப்போக வேண்டியதுதானா என்று கேட்பீர்கள். வேலையை விட்டுவிட்டு போக முடியும் என நீங்கள் உறுதியாக நினைத்தால் மட்டுமே, நீங்கள் அப்படிப் பேசலாம். வெறும் உதார் விட்டீர்கள் எனில், பின்னால் நீங்கள் தான் வருத்தப்படுவீர்கள். பதவி உயர்வு என்று கேட்பவர்களுக்கு பல சமயங்களில் அது கிடைப்பதே இல்லை.

ஒருவேளை, மிரட்டலுக்கு பயந்து பதவி உயர்வைத் தந்துவிட்டாலுமே எதிர்காலத்தில் இவர் எப்படி வேண்டுமென்றாலும் நம்மை மிரட்டுவார் என நிர்வாகம் நினைத்து, அதற்கேற்பவே நம்மை எடைபோடும். பதவி உயர்வு கிடைக்காமல் போய் அதனால் வேலை மாறிக்கொண்டே போனால் எதிர்காலத்தில் உங்களை புதிய நிறுவனத்தில் நேர் காணல் செய்யும் அதிகாரி உங்களை ஒரு விசுவாசம் இல்லாத நபராக உங்கள் அலுவலக நிர்வாகம் கருதிவிடவும் நிறைய வாய்ப்புள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள். எனவே, ஜாக்கிரதை" என்று எச்சரிக்கிறார் ஆசிரியை.

**பதவி உயர்வுக்கான தடைகள் என்னென்ன?**

பதவி உயர்வால் உங்களுக்கு கிடைக்கப்போகும் பதவிக்குத் தேவைப்படுகிற நம்பிக்கை/தன்னம்பிக்கை குறைவாக இருத்தல், அந்தப் பதவிக்குத் தேவைப்படுகிற மனிதர்களை நிர்வகிக்கக்கூடிய திறமை இல்லாது இருத்தல், அந்தப் பதவிக்குத் தேவையான முதிர்ச்சியைப் பெறாது இருத்தல், 'இந்தப் பதவி எனக்கு தரப்பட்டே ஆக வேண்டும்' என்கிற உரிமை உடன் நடந்துகொள்ளுதல், அந்தப் பதவிக்குத் தேவையான திறமைகள் இல்லாமல் இருத்தல் அல்லது அப்படி சிந்திக்கும் திறன்கள் இல்லாமல் இருத்தல், பணியிட மாறுதலை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுதல், நம்முடைய பிரிவின் செயல் பாட்டுக்கு முழுப்பொறுப் பேற்காமல் மற்றவர்கள் மேல் பழிபோடும் குணங்களைக் கொண்டிருத்தல், நீங்கள் உங்களைத் தவிர வேறு யாருக்குமே விசுவாசியாக இல்லாமல் இருப்பதை நிர்வாகம் கண்டுபிடித்துவிடுதல், நீங்கள் ஏற்கெனவே பார்க்கும் வேலையை (பதவி) யாராலும் உங்கள் அளவுக்கு சிறப்பாகச் செய்ய முடியாது / உங்களுக்குப் பதிலாக ஆள் கிடைக்கவே கிடைக்காது எனும் அளவுக்கு நீங்கள் திறமையுடன் செயல் பட்டு வருதல், உங்களுடைய நேரடியான மேலதிகாரியிடம் நல்ல உறவில் இல்லாமல் இருத்தல் போன்றவை உங்களுக்கு பதவி உயர்வு என்பது கிடைப்பதற்குத் தடையாக இருக்கக்கூடிய சில முக்கிய காரணங்களாகும். இவற்றில் ஏதாவது ஒன்றோ, அதற்கு மேற்பட்ட காரணங்களால் உங்களுடைய பதவி உயர்வு தடைப்படுகிறதா என்று பார்த்து, அவற்றை சரிசெய்துகொள்ள முயலுங்கள்" என்கிறார் ஆசிரியை.



**முதிர்ச்சியான எண்ணத்துடன் செயல்படுங்கள்...**

"வெறுமனே கடின உழைப்பை தருவது என்பது மட்டுமே பதவி உயர்வுக்கு உதவும் ஒரு விஷயமாக இருக்காது. உங்களுடைய வேலை யையும் திறமையையும் வெளி உலகுக்கு வெளிப்படுத்தும் நபராக நீங்களே இயங்குங்கள். அலுவலகக் கூட்டங்களில் அவ்வப்போது பேசுங்கள். நீங்கள் இருப்பதை உணர்த்துவதிலும் உங்களால் என்ன பலன்கள் இருக்கின்றன என்பதையும் தெளிவுபடுத்தும் படி நடந்துகொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு காரியத்தில் ஈடுபடுத்தப் பட்டால் அதில் வேறெ லெவலில் எனர்ஜி இருக் கிறது என்பதை நிரூபியுங்கள். தோல்விகள், சிக்கல்கள் போன்ற வற்றால் துவண்டுபோகாமல் எதிர்த்து நின்று அடித்து ஆடும் நபர் நீங்கள் என்பதை அனைவருக்கும் காட்டுங்கள். வெற்றி வந்தால் பெரியதாக ஆடாமலும் தோல்வி வந்தால் துவண்டு போய் விடாமலும் 'இதெல்லாம் ஒரு அனுபவம்தான்' என்று சொல்லி சீரான நடத்தையுடன் செயல் படுங்கள். இவைதான் உங்களுக்குப் பதவி உயர்வைக் கொண்டு வருவதற் கான முக்கிய காரணிகளாக இருக்கும்" என்கிறார் ஆசிரியை.

**கட்டாயம் கடக்க வேண்டிய ஆறு படிநிலை...**

"பணியிடத்தில் எவ்வளவு போட்டி நிலவுகிறது, பணிபுரியும் நிறுவனம் அது செயல்படும் துறையில் எந்த அளவுக்கு வெற்றிகரமான நிறுவனமாக இருக்கிறது, உங்களுடைய நேரடியான மேலதிகாரி உங்களுக்கு எந்த அளவுக்கு உதவியாக இருப்பார் என்பவற்றையும் தெளிவாகப் புரிந்துகொண்டு செயல்படுங்கள். பதவி உயர்வைப் பெற தெளிவுடன் இருத்தல், உறுதியுடன் செயல்படுதல், நம்பிக்கையுடன் செயல்படுதல், நம்பகத் தன்மையை உருவாக்குதல், உங்கள் திறமைகளை சரியான அளவில் பறைசாற்றுதல், வாய்ப்பு கிடைக்கும்போது இவை அனைத்தையும் உபயோகித்து வெற்றி பெறுதல் என்ற ஆறு படிநிலைகளை நீங்கள் கடக்க வேண்டும்" என்று சொல்லும் இந்தப் புத்தகத்தின் ஆசிரியை, இவற்றை தனித்தனி அத்தியாயங்களில் எடுத்துச் சொல்லி அசத்தியிருக்கிறார்.

சரி, இதை எல்லாம் செய்தும் பதவி உயர்வு கிடைக்கா விட்டால்..? உங்கள் உயரதிகாரியை ஒருமுறை சந்தித்து, காரணம் கேளுங்கள். நீங்கள் சரிசெய்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என அவர் சொல்வதில் உங்களுக்கு நியாயமாகப்படும் விஷயங்களை மாற்றிக்கொள்ளுங்கள். அப்படியும் கிடைக்கவில்லையா? நீங்கள் அந்த நிறுவனத்தை விட்டுவிட்டு வேறு நிறுவனத்துக்கு மாறுவதே சரி" என்று இந்தப் புத்தகத்தை முடிக்கிறார் ஆசிரியை.

அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது.

- நாணயம்.




## ஜூனில் வருகிறது விக்ரம்

தமிழ்த் திரையுலகின் முக்கிய நடிகர் கமல்ஹாசன். இன்னமும் நாயகனாகவே நடித்து வரும் அவரின் படங்கள் கடந்த 4 வருடங்களாக வெளியாகவில்லை.

இந்த நிலையில், கமல் நடித்துள்ள விக்ரம் படம் வரும் ஜூன் 3ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியாகும் இந்தப் படம் வெளியாக இன்னமும் இரண்டரை மாதங்களுக்கு மேல் உள்ள நிலையில், கமல் ஹாசன் ரசிகர்கள் அந்தப் படத்தை வரவேற்க இப்போதே தயாராகி விட்டார்கள்.

## மயக்குவது அழகு மட்டுமல்ல...!

நடிகை சமந்தா கறுப்பு மற்றும் பச்சை நிறத்தில் ஆடை அணிந்து வெளியான படங்கள் மூலம் அழகால் பலரையும் மயங்கச் செய்தார்.

இந்த ஆடையின் விலை தொடர்பான விவரம் வெளியாகி தற்போது ரசிகர்களை மயக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த ஆடையின் விலை ஒரு இலட்சத்து 80 ஆயிரம் இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் ஆறரை இலட்சம் ரூபாயாம்.



## மீண்டும் பாவனா



தமிழில் மிஷ்கின் இயக்கிய "சித்திரம் பேசுதடி' படம் மூலம் அறிமுகமானவர் நடிகை பாவனா. பல படங்களில் நடித்த அவர் தனது வாழ்வில் ஏற்பட்ட சில பிரச்னைகளால் திரையுலகிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

கன்னட தயாரிப்பாளர் நவீனை திருமணம் செய்த அவர், கன்னட படங்களில் மட்டுமே அண்மைக்காலமாக நடித்து வந்தார். இந்த நிலையில் 5 வருட இடைவெளிக்கு பிறகு மீண்டும் மலையாளத்தில் புதிய படமொன்றில் நடிக்கிறார் பாவனா.

படத்திற்கு "என்திக்காக்கா கொரு பிரேமந்தார்னு" எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## வழியை மாற்றிய பிரியா!

தொடர் நாடகம் மூலம் திரையுலகுக்கு வந்தவர் பிரியா பவானி சங்கர். தற்போது அவர் 6இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்து வருகிறார். இதனிடையே இணையத் தொடரிலும் நடிக்க ஆரம்பித்துள்ளார்.

கவர்ச்சி காட்டாமல் நடித்து வந்த இவர், தற்போது கவர்ச்சிக்கு திரும்பியுள்ளார். அண்மையில், கவர்ச்சி போட்டோ ஷூட் நடத்தியுள்ளார். அவரின் கவர்ச்சிப் படங்கள் இப்போது இணையத்தில் பிரபலமாகி வருகின்றன.





## ரஜினியுடன் பிரியங்கா

சிவகார்த்திகேயனுடன் டாக்டர், சூர்யாவுடன் எதற்கும் துணிந்தவன் படங்களில் நடித்தவர் பிரியங்கா மோகன். சிவகார்த்திகேயன் நடிக்கும் டான் படத்திலும் இவரே நாயகியாக நடிக்கிறார்.

இந்த நிலையில் அடுத்தபடியாக நெல்சன் திலீப் குமார் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் 169ஆவது படத்திலும் பிரியங்கா மோகன் நடிக்கவுள்ளார் என்று ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது.

இந்த படத்தில் ரஜினிக்கு நாயகியாக ஐஸ்வர்யா ராய் நடிக்கிறார் என்று கூறப்படும்நிலையில், பிரியங்கா மோகன் முக்கிய வேடத்தில் நடிக்கிறாராம். அனிருத் இசையமைக்கிறார்.

## திரை விமர்சனம்




| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | ராதேஷ்யாம் |
| இயக்கம் | : | ராதாகிருஷ்ணகுமார் |
| இசை | : | ஜஸ்டின் பிரபாகரன், தமன் |
| நடிப்பு | : | பிரபாஸ், பூஜா ஹெக்டே, சத்யராஜ் |

தெலுங்கில் மணிரத்னம் இயக்கத்தில், இளைய ராஜா இசையமைப்பில், நாகார்ஜுனா, கிரிஜா நடிப்பில் 1989ஆம் ஆண்டு வெளிவந்து வெற்றி பெற்ற படம் "கீதாஞ்சலி". தமிழில் "இதயத்தை திருடாதே" என்ற பெயரில் வெளியானது. இந்தப் படத்தின் இன்னொரு வடிவம்தான் "ராதேஷ்யாம்".

70களில் நடக்கும் கதை. வெளிநாடுகளிலும் புகழ் பெற்ற கைரேகை நிபுணர், இத்தாலியின் ரோம் நகரில் வசிக்கும் பிரபாஸ், தன்னுடைய வாழ்க்கை எதுவரை என்று அவரே கணித்து வைத்திருக்கிறார். அதே ரோம் நகரில் மருத்துவராக இருப்பவர் பூஜா ஹெக்டே. மருந்தே கண்டு பிடிக்க முடியாத வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய வாழ்நாள் அறுபதே நாட்கள்தான் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

ஓர் அழகான சந்திப்பில் பிரபாஸ், பூஜா தங்கள் மனதைப் பறி கொடுக்கிறார்கள். தங்கள் எதிர்காலம் பற்றி மருத்துவ ரீதியாகத் தெரிந்தவரும், ஜோதிடம் ரீதியாகத் தெரிந்தவரும் காதலில் விழுகிறார்களா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தில் ஆரம்பம் முதல் கடைசி வரை காதல் மட்டுமே, காதலைத் தவிர வேறொன்றமில்லை. அற்புதமான இடங்களுடன், கிரபிக்ஸ் காட்சிகளும் கலந்து படமாக்குவதில் இயக்குநர் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார். அதற்கு ஒளிப்பதிவாளர் மனோஜ் பரமஹம்சா நிறையவே கை கொடுத்திருக்கிறார். அதிலும், பிரபாஸ், பூஜா முதலில் சந்திக்கும் அந்த ரயில் காட்சியில் கமெரா சுற்றிச் சுழன்று படமாக்கி வியப்பூட்டுகிறது. கண்களுக்கு இதமாக, குளிர்ச்சியாக படத்தைக் கொடுக்க நினைத்தவர்கள் மனதுக்கு இதமாகவும் படத்தைக் கொடுக்க இன்னும் கூடுதலாய் யோசித்திருக்கலாம்.

பாகுபலி, சாஹோ என வந்த அடுத்தடுத்த இந்தியளவிலான படங்களில் பிரபாஷை அதிரடி நாயகனாகப் பார்த்தவர்கள் இதில் காதல் நாயகனாக மட்டுமே பார்க்க முடியும்.

பிரேர்னா, வித்தியாசமான கதாபாத்திர பெயர் பூஜா ஹெக்டேவுக்கு. ஒவ்வொரு அசைவிலும் அழகால் வசீகரிக்க வைக்கிறார். அவருக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஆடைகள் அவருக்கு மேலும் அழகூட்டுகின்றன.

படத்தில் மற்ற கதாபாத்திரங்களுக்கு அதிக வேலையும் இல்லை, முக்கியத்துவமும் இல்லை. படத்தில் நகைச்சுவை, சண்டைக் காட்சிகள் என மருந்துக்குக்கூட கிடையாது.

ஜஸ்டின் பிரபாகரன் பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார். யுவன்ஷங்கர் ராஜா பாடியிருக்கும் "யாரோ யார் அவளோ" பாடலும், சித் ஸ்ரீராம் பாடியுள்ள, "திரையோடு தூரிகை" கதையோடு ஒன்றிணைந்து ரசிக்க வைக்கிறது. தமனின் பின்னணி இசை காதலுடன் கை கோர்க்கிறது.

நாயகன் நாயகி இருவருக்கும் இடையில் என்ன பிரச்னை என்பது தெரிந்த பின் படத்தின் மீதான சுவாரசியம் குறைந்து விடுகிறது. அவர்கள் இருவரும் ஒன்று சேர்வார்களா, மாட்டார்களா என்ற பதை பதைப்பு, பரபரப்பு உணர்வுபூர்வமாக திரைக்கதையில் இடம் பெறவில்லை. படத்தின் உருவாக்கப் பிரமாண்டத்திற்காகவும் நடிப்புக்காகவும் படத்தைப் பார்க்கலாம்.

# அவமதிக்கப்படும் இரு ஜாம்பவான்கள்!



சம்பியன்ஸ் லீக்கின் 16 அணிகள் சுற்றின் இரண்டாவது லெக் போட்டியில் ரியல் மட்ரிட் அணியோடு மோதியது பாரிஸ் சென். ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) முதல் லெக்கில் 1-0 என முன்னிலையில் இருந்த அந்த அணி, இரண்டாவது லெக்கின் முதல் பாதியில் 1 கோல் அடித்து 2 கோல்கள் முன்னிலை பெற்றது. இரண்டு கோல் களையும் எம்பாப்பேதான் அடித்திருந்தார். இரண்டு கோல்கள் முன்னிலை யோடு இரண்டாவது பாதியைத் தொடங்கிய அந்த அணிக்கு ரியல் மட்ரிட் மிகப் பெரிய அதிர்ச்சி கொடுத்தது.

18 நிமிட இடைவெளி யில் ஹட்ரிக் கோல் அடித்து, ரியல் மட்ரிட் அணியை காலிறுதுக்குள் அழைத்துச் சென்றார் கரிம் பென்சிமா. இந்தப் போட்டி யில் மெஸ்ஸி, நெய்மர் இருவரும் மிகவும் சுமாராகவே விளை யாடியிருந்தனர். அதிலும் முதல் லெக்கில் மெஸ்ஸி ஒரு பெனால்டியை வேறு தவறவிட்டிருந்தார். அடித்தாடுவதிலும் பெரிய அளவுக்கு பங்களிக்காவிட்டாலும் தற்காப்பிலாவது உதவியிருக்கலாம். ஆனால், இருவரும் அதையும் செய்யவில்லை. அதனால், பாரிஸ் சென். ஜெர்மைன் ரசிகர்கள் பெரும் அதிருப்திக்குள்ளானார்கள்.

இந்தப் போட்டி மட்டும் இல்லை. இந்தத் தொடர் முழுவதுமே அவர்கள் பங்களிப்பு சொல்லிக்கொள்ளும் வகையில் இல்லை. எம்பாப்பே மட்டும்தான் அடித்தாடுவதில் தொடர்ந்து சீராக விளையாடிக் கொண்டிருக்கிறார். அதனால்தான், அந்த அதிருப்தி கோபமாக உருமாறியது.

இந்நிலையில் லீக் 1 தொடரில் போடோக்ஸ் அணிக்கு எதிராக மோதியது பி.எஸ். ஜி. அந்த அணியின் ரசிகர் குழு போட்டி தொடங்குவதற்கு முன்பு ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தது.

“நம் பாரிஸ் சென் ஜெர்மைன் அணி, அணிக்கு பயன்தரக்கூடிய வீரர்களைக் கொண்டிருக்கவேண்டும். இந்த அணியால் பயனடையக்கூடியவர்கள் இருக்கக் கூடாது. ஞாயிற்றுக்கிழமை போர்டோக்ஸ் அணிக்கெதிரான போட்டியின்போது எங்கள் அதிருப்தியை நாங்கள் தெரிவிப்போம்.



மைதானத்துக்கு வரும் இந்த கழகத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் எங்களோடு இணைந்து இந்த அகிம்சையான போராட்டத்தில் இணைய வேண்டுகிறோம்“ என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்.

சொல்லியதைப் போலவே போட்டியின்போது அவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்திக்கொண்டே இருந்தனர். மெஸ்ஸியோ நெய்மரோ பந்தைத் தொட்டாலே கத்தத் தொடங்கினார்கள். முதல் பாதியில் இருவரும் ப்றீ கிக் எடுக்க பந்தின் முன் நின்றபோது விசிலடித்தனர். ஐரோப்பாவின் ஒருசில நாடுகளில் விசில் அடிப் பது நம் ஊரைப் போல அல்ல. அது அவமாரியதை செய்வது. அதனால், தொடர்ந்து விசிலடித்துக்கொண்டே இருந்தனர். அந்த ப்றீ கிக்கை நெய்மர் தவறவிட்டபோது, நக்கலாகக் கொண்டாடினர்.

பி.எஸ்.ஜி அணியின் இரண்டாவது கோலை நெய்மர் அடித்தபோதும் கத்திக்கொண்டே இருந்தனர். அதனால், அவரும் அந்த கோலைக் கொண்டாடவில்லை. இந்தப் போட்டியை 3-0 என வென்றது பாரிஸ் சென். ஜெர் மைன்.



உதை பந்தாட்ட உலகின் இரண்டு பெரிய நட்சத்தி ரங்கள் தங்கள் சொந்த அணியின் ரசிகர்களாலேயே விமர்சிக்கப்படுவது பெரும் பேசுபொருளாக மாறியிருக்கிறது.

# 12 நிமிடங்களில் 3 கோல்கள்

சம்பியன்ஸ் லீக்கின் 16 அணிகள் சுற்றில் வியரல் அணியிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியிருக்கிறது ஜூவன்ட்ஸ். கடந்த சில ஆண்டுகளாகப் பெரும் சரிவைச் சந்தித்து வரும் ஜூவன்ட்ஸ் அணிக்கு இது இன்னும் பெரிய பின்னடைவாக அமைந்திருக்கிறது.

சம்பியன்ஸ் லீக் தொடரின் 16 அணிகள் சுற்று கடந்த இரண்டு வாரங்களாக நடந்துகொண்டிருக்கின்றன. கடந்த வாரம் நடந்த போட்டிகளில் பேயர்ன் மூனிச் அணி சால்ஸ்பெர்க்கையும், ரியல் மட்ரிட், பாரிஸ் சென் ஜெர்மைன் அணியையும் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னே றின. இன்டர் மிலன் அணிக்கெதிராகத் தோற்றிருந்தா லும் ஒட்டுமொத்த கோல்கள் அடிப் படையில் காலிறு திக்கு முன்னேறியது லிவர்பூல். மன்செஸ்டர் சிற்றி, ஸ்போர்ட்டிங்கோடு சமன் செய்திருந் தாலும், 5 கோல் முன்னிலை பெற்றிருந்ததால் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இந்நிலையில் இந்த வாரத்துக்கான போட்டிகள் வியாழக்கிழமை தொடங்கின. டார்வின் நுனெஸ் அடித்த கோலால், அயாக்ஸ் அணியை 1-0 என வென்றது பென்ஃபிகா. அந்த அணிகள் விளையாடிய முதல் லெக் போட்டி 2-2 என முடிந்திருந்தது. அதனால் 3-2 என்ற கோல் அடிப்படையில் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது பென்ஃபிகா.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மன்செஸ்டர் யுனைடட் எதிர் அத்லெடிகோ மட்ரிட் ஆட்டம் கடைசி நிமிடம் வரை பரபரப்பாகவே சென்றது. ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் ரெனான் லோடி அடித்த கோல் அத்லெடிகோ மட்ரிட்டுக்கு முன்னிலை ஏற்படுத்திக் கொடுத்தது. முதல் லெக் போட்டி 1-1 என முடிந்திருந்ததால், இந்த கோல் யுனைற்றெட்டுக்கு மிகப்பெரிய சிக்கலை ஏற்படுத்தியது. அதனால், தொடர்ந்து அடித்து செய்துகொண்டிருந்தது அந்த அணி. ஆனால், வழக்கமாகவே தடுப்பாட்டத்தில் பட்டையைக் கிளப்பும் அத்லெடிகோ மட்ரிட், இதுபோன்ற சூழ்நிலையில் எப்படி செயல்படும்! ஓர் அரணை உருவாக்கி தடுத்துக்கொண்டே இருந் தார்கள்.

மன்செஸ்டர் யுனைற்றெட் அணியின் மேலாளர் ரால்ஃப் ராக்னிக் பல வீரர்களை மாற் றிப் பார்த்தும் அத்லெடி கோவின் அரணை உடைக்க முடியவில்லை. அணித் தலை வர் ஹாரி மகுயரை வெளியே எடுத்து மாடாவைக் கூட கள மிறக்கிப் பார்த்தார். ஆனால், எதுவும் எடுபடவில்லை. இதனால் இந்தப் போட்டியை வென்று காலிறுதிக்கு முன்னேறி யது அத்லெடிகோ மட்ரிட்.



கடந்த வாரம் லயோனல் மெஸ்ஸியின் பாரிஸ் சென் ஜெர்மைன் அணி வெளியேறிய நிலையில், இப்போது கிறிஸ் டியானோ றொனால்டோவின் மன்செஸ்டர் யுனைற்றெட் அணியும் வெளியேறியிருக்கி றது. உதை பந்தாட்ட உலகின் இந்த இரண்டு ஜாம்பவான்க ளும் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 16 அணிகள் சுற் றோடு வெளியேறியிருப்பது அனைவருக்கும் பேரதிர்ச்சி யாக அமைந்திருக்கிறது.

இந்நிலையில், லீல் மற்றும் செல்சீ அணிகளுக்கு இடையே நடந்த போட்டியில், செல்சீ 2-1 என வென்றது. முதல் லெக் போட்டியையும் 2-0 என அந்த அணியே வென்றிருந்ததால் எந்தப் பிரச்னையும் இல்லா மல் காலிறுதிக்கு முன்னேறியது செல்சீ.

டுரினில் நடந்த போட்டியில் ஜூவன்ட்ஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறும் என்று எதிர்பார்க் கப்பட்டது. முதல் லெக் போட்டி 1-1 என முடிந்திருந்த தால், இந்தப் போட்டியின் வெற்றி இரண்டு அணிகளுக் கும் அவசியமானது. ஆட்டத்தின் தொடக்கத்தில் ஜூ வன்ட்ஸ்ஆதிக்கம் செலுத்தியது. பல ஷொட்கள் எடுத்த னர். ஆனால், அவர்களால் அதை எதையும் கோலாக மாற்ற முடியவில்லை. அடித்த 5 ஷொட்களுமே வியரல் கோல் காப்பாளர் ஜெரினிமோ ரூல்லியால் தடுக் கப்பட்டது.

ஆட்டத்தின் 75-வது நேரம்வரை போட்டி 0-0 என்று சமநிலையில் தான் இருந்தது. ஆனால், அதன் பிறகு எல்லாமே மாறத் தொடங்கியது. 75-வது நிமிடத்தில் வியரல் தடுப்பாட்ட வீரர் பிரான்சிஸ் காக்லினை, டேனியல் ருகானி பொக்ஸூக்குள் தள்ளிவிட, வியரல் அணிக்கு பெனால்டி கிடைத்தது. அதை கோலாக்கினார் ஜெரார்ட் மொரேனோ.

போட்டியில் திரும்ப வர 12 நிமிடமே இருந்ததால், அதிரடியான மாற்றங்களை செய்தது ஜூவன்ட்ஸ். ஆனால், அது வியரலுக்கு இன்னும் சாதகமானது. 84ஆவது நிமிடத்தில் கிடைத்த கோர்ணரை வியரல் டிஃபண்டர் செர்ஜ் ஆரியர் தலையால் இடிக்க நடுவே வந்த பந்தை மற்றொரு தடுப்பாட்ட வீரரான பௌ டாரஸ் கோலாக மாற்றினார். இரண்டு கோல்கள் போதாது என போட்டி முடியும் தருணத்தில் மூன்றா வது கோலும் கிடைத்தது.

89ஆவது நிமிடத்தில் மதியஸ் டி லிட் பெனால்டி ஏரியாவில் கையால் தட்டவே, அதை கோலாக மாற்றி னார் ஆர்னார் டஞ்சுமா. அதனால் 3-0 என வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது அந்த அணி. சீரி ஆ தொடரில் நான்காவது இடத்தில் இருக்கும் யுவன்டஸ் அடுத்த ஆண்டு சாம்பியன்ஸ் லீக் தொடருக்கு முன்னே றுமா என்பதே இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

# சமகால தமிழ் சிறுகதைகளின் பிரச்னைகள் என்ன?

**முகம்மது ரியாஸ்**

கடந்த பத்தாண்டு கால தமிழ் இலக்கியச் சூழலை எடுத்துக்கொண்டால், சிறுகதைகளின் எண்ணிக்கை மிக அதிகம். இந்தப் பத்தாண்டு காலச் சூழல் கட்டமைப்பில் இணையத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. எழுத்தாளர்கள் - வாசகர்களுக்கு இடையேயான உரையாடல்கள், புத்தகங்கள் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள், இலக்கியச் சந்திப்பு என இலக்கிய ஈடுபாடு உடையவர்களை ஒரு அமைப்பாகவே இணையம் ஒன்றிணையச் செய்தது.

புதிய படைப்பாளிகள் பலர் அடையாளம் காணப்படலாயினர். முந்தைய காலகட்டம்போல் இல்லாமல், படைப்புகளின் அச்சாக்க வசதி எளிமையானதால், ஏதேனுமொரு வகையில் ஒவ்வொரு இலக்கிய வாசகரும் தங்களைப் படைப்பாளியாக ஆக்கிக்கொள்ளும் சாத்தியத்தை இணையம் உருவாக்கித்தந்தது.


அந்த வகையில், சிறுகதை வடிவம் பலரின் தேர்வாக அமைந்தது என்றுகூடச் சொல்லலாம். கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்த இணைய இலக்கிய இதழ்களின் பெருக்கம் அவற்றுக்கு மேலும் உந்துதலாக அமைந்தது. ஒட்டுமொத்தமாகச் சிறுகதைகளின் பெருக்கத்தை இவ்வாறு அடையாளப்படுத்திவிட முடியாது என்றாலும், சிறுகதைகள் உடனடி பிரசுரத் தன்மை கொண்டிருப்பதாலும், தங்கள் இருப்பை அறிவித்துக்கொள்ளும் அளவுக்கான புனைவு வடிவமாக அது அமைந்திருப்பதாலும் பெரும்பாலானோரின் தேர்வு சிறுகதையாக இருந்தது. அந்த வகையில், கடந்த பத்தாண்டுகளில் எழுதப்பட்ட சிறுகதைகளின் தன்மை எத்தகையதாக இருந்திருக்கிறது என்பதை அறிவதன் மூலம் தற்காலத் தமிழ் இலக்கியப் போக்கையும் புரிந்துகொள்ள முடியும்.

1. சமூகத்திலிருந்து துண்டித்துக் கொள்ளுதல்: தனிமனிதன் - சமூகம் - குடும்பம், தனி மனிதத் தத்துவத் தேடல்கள், ஆண் - பெண் உறவு என எந்தவொரு இலக்கியப் படைப்பையும் இவ்வகையான வகைப்பாட்டுக்குள் கொண்டுவர இயலும். காலங்காலமாக இவையே இலக்கியப் படைப்புகளின் பேசுபொருளாக இருந்திருக்கின்றன. எனில், இன்றைய படைப்பாளியின் பார்வையில் அவை என்னவாக அர்த்தம் கொள்கின்றன என்பதே சமகாலப் படைப்புச் சூழலைக் கட்டமைக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் தமிழ்ச் சூழலில் எழுதப்பட்ட கதைகளை எடுத்துக்கொண்டால், அவற்றில் உள்ள உலகம் பெரிதும் சமூகத்தின் மீதான பார்வையின் அடிப்படையில் உருவாகி வந்ததாக இல்லை. மாறாக, தமிழ் இலக்கியச் சூழலில் கட்டமைக்கப்பட்டிருக்கும் கதை உலகம் மீதான கற்பிதத்திலிருந்து உருவானதாக இருக்கிறது. இதன் விளைவாக, சமூகத்துக்கும் கதை உலகத்துக்கும் இடையேயான உறவு துண்டிக்கப்பட்டுவிடுகிறது.

**2. மொழியும் பார்வைக் கோணங்களும்:** ஆசிரியரின் பிரத்தியேகப் பார்வையே ஒரு நிகழ்வைக் கதைத் தளத்துக்கு இட்டுச்செல்கிறது என்று வரையறுத்துக்கொள்ளும்பட்சத்தில், இங்கு எழுதப்படும் பெரும்பாலான கதைகளில் இருப்பது, தனிமனித உணர்ச்சி நிலைகள் மீதான விவரணைகள் மட்டும்தான். அந்த உணர்ச்சி நிலையை, நிகழ்வை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கும் நயமான சொல் தேர்வுகள், உவமைகள் போன்றவை அந்த நிகழ்வுக்குக் கதைபோலான சாயலை அளிக்கின்றன.

தவிர, அது கதையல்ல. மொழியல்ல, நிகழ்வின் மீதான பார்வைக் கோணங்கள்தான் ஒரு பிரதியை இலக்கியப் பிரதியாக்குகின்றன. வெகுஜனக் கதைகள் அவற்றுக்கென்று உருவாகிவந்த வகைப்பாட்டுக்குள் நின்று, வெகுஜனப் பத்திரிகை மொழியில் ஒரு நிகழ்வை விவரிக்கின்றன. இங்கு எழுதப்படும் இலக்கியச் சிறுகதைகள், அவற்றுக்கென்று உருவாகிவந்த தளத்தில் நின்று சிறுபத்திரிகை மொழியில் ஒரு நிகழ்வை அணுகுகின்றன. அது தவிர்த்து, வெகுஜனச் சிறுகதைகளுக்கும் இலக்கியச் சிறுபத்திரிகைச் சிறுகதைகளுக்கும் பெரிய வேறுபாடு இல்லை.



**3. அர்த்தமில்லா கற்பனைகள்:** மிகுகற்பனைக் கதைகள், மாய யதார்த்தக் கதைகள் என எழுதப்படும் கதைகளும் உள்ளீடற்ற, பொருந்தா கற்பனைகளுடனே நின்றுவிடுகின்றன. அதேபோல் சிறுகதைகளின் முடிவுகள் அர்த்தமற்ற அந்தரத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. அதனையே அக்கதைகளுக்கான அர்த்தமாகப் பாவிக்க முயல்கின்றன. யதார்த்தக் கதைகூறல், மாய யதார்த்தம், பின் நவீனத்துவக் கதை சொல்லல்கள் யாவும் வெறும் கதை கூறும் முறைகள் மட்டுமல்ல. அவையெல்லாம் நிகழ்வுகள் மீதான தத்துவப் பார்வையும்கூட. ஆனால், இக்கதை கூறல் முறைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் பெரும்பாலான கதைகள், அவற்றை வடிவ உத்திகளாக மட்டுமே பயன்படுத்திக்கொள்கின்றன.

**4. தன்னிலைக் கதைசொல்லிகள்:** அடுத்ததாக, கதைசொல்லியின் தன்மை. பெரும்பாலான சிறுகதைகளில் கதை தன்னிலையிலிருந்துதான் சொல்லப்படுகிறது. படர்க்கையிலிருந்து சொல்லப்பட்டாலும் கதையின் இயங்கு தளம் தன்னிலைவயப்பட்டதாகவே இருக்கிறது. கதையில் புனைவு உலகத்தைக் கட்டமைக்காமல், சமூக நிகழ்வு ஒன்றுக்குத் தன்னைச் சாட்சியாக்கிக் கொண்டு, கதைசொல்லி தனக்கு நேர்ந்த அல்லது தான் இருக்கும் சூழலைப் பற்றி வாசகர்களிடம் பகிர்ந்துகொள்கிறார். அதிலும் அவர் எந்தத் தரப்பின் வழியே கதையைச் சொல்கிறாரோ அதையே நியாயத் தரப்பாகக் கொண்டு கதை நிகழ்வுகளைக் கட்டமைக்கிறார்.

**5. அன்றாடச் சிக்கல்களின் குவியல் :** அடுத்ததாக, பெரும் பாலான சிறுகதைகள் புறவயமான சமூக அரசியலைப் பேசுபொருளாகக் கொண்டிருப்பதில்லை. சாதிய ஒடுக்குமுறைகள், பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் பற்றிய கதைகள் என்று பல கதைகள் வந்திருந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை வரையறுக்கப்பட்டுள்ள தளத்தில் நின்றே நிகழ்வுகளை அணுகுபவையாக இருக்கின்றன. புறவயமான சமூக அரசியலைப் பேச வேண்டும் என்பது நியதி அல்ல என்றாலும், அன்றாடச் சிக்கல்களை மட்டுமே பேசுவதை எதன் வெளிப்பாடாகப் புரிந்துகொள்வது? முந்தைய தலைமுறை சிறுகதையாளர்களின் உலகத்தைவிட இன்றைய சிறுகதையாளர்களின் உலகம் விரிந்திருந்தாலும் இன்று எழுதப்படும் கதைகள் முந்தைய தலைமுறையின் தொடர்ச்சியாக, பெரிதும் சிறுபத்திரிகை உலகத்தை நோக்கி எழுதப்படும் கதைகளாக இருக்கின்றனவே தவிர, சமூகத்தை நோக்கி எழுதப்படுபவையாக இல்லை.

ஒரு இலக்கியப் படைப்பு இன்ன விஷயத்தைத்தான் பேசுபொருளாகக் கொள்ள வேண்டும் என்று வரையறை விதிக்க முடியாது.

அது எதை வேண்டுமானாலும் பேசுபொருளாகக் கொண்டிருக்கலாம். அதன் தேடல் எதை வேண்டுமானாலும் மையப்படுத்தியதாக இருக்கலாம். ஆனால், அதன் மூலம் அப்படைப்பு என்ன நிகழ்த்துகிறது என்பதே சமூகத்துக்கான படைப்பாக அதனை மாற்றுகிறது.


> **ஒரு இலக்கியப் படைப்பு இன்ன விஷயத்தைத் தான் பேசுபொருளாகக் கொள்ள வேண்டும் என்று வரையறை விதிக்க முடியாது. அது எதை வேண்டுமானாலும் பேசுபொருளாகக் கொண்டிருக்கலாம். அதன் தேடல் எதை வேண்டு மானாலும் மையப்படுத்தியதாக இருக்கலாம். ஆனால், அதன் மூலம் அப்படைப்பு என்ன நிகழ்த்துகிறது என்பதே சமூகத்துக்கான படைப்பாக அதனை மாற்றுகிறது.**




2020ம் ஆண்டு சென்னை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு வெளியாகும் புதிய புத்தகங்கள்!

# கொரோனா தொற்றிய நாய்

நடேசன்





ஹாங்காங்கில், இரண்டு பொமரேனியன் நாய்களில் கோவிட் வைரஸ் காணப் பட்டது என்ற செய்தியை இரு வருடங்களுக்கு முன்பாக பார்த்தேன். அக்காலத்தில் அவுஸ்திரேலியாவில் அதிக நோய் தாக்கமில்லை. ஹாங்கொங்போல் இங்கு அடுக்கு மாடி கட்டிடங்கள் இல்லை. பெரும்பாலானவை தனியான வீடுகளென்பதால் இங்கு நாய்களில் தொற்று ஏற்பட சாத்தியமில்லை என்பது எனது எண்ணமாக இருந்தது.

மெல்பனில், கிழமையில் ஒரு நாள் வேலை செய்தபோதிலும் இரு வருடங்களாகத் தொடர்ந்து வேலை செய்து வந்தேன். எல்லோரும் மாஸ்க்குடன் வருவார்கள் . நானும் மாஸ்க் போட்டிருந்தேன். ஒரு நாள் ஒரு நாயில் இரத்தம் பரிசோதனைக்கு எடுத்தபோது ஊசி எனது கைவிரலில் குத்தி இரத்தம் வந்தது . என்னை அனுதாபத்துடன் பார்த்த அதன் உரிமையாளரிடம் , “ நாய்கள், பூனைகள், மனிதர்களைவிட பாதுகாப்பானவை. அவர்களிடமிருந்து எயிட்ஸ் (AIDS) ஹெப்பரைரிஸ் (Hepatitis) முதலான நோய்கள் தொற்ற வாய்ப்பில்லை “ என்றேன்.

இதேபோல் இளம்வயதான ஒரு ஜோடி ஒரு சிறிய பூடில் ( Poodle) நாயைக் கொண்டு வந்தார்கள். அதை நான் குனிந்து பரிசோதித்தபோது, அது எனது மாஸ்க்கின் மேலாகத் தெரிந்த கன்னம் காது எல்லாவற்றையும் நக்கியது.

அந்தப் பெண், நாயை நக்குவதை நிறுத்தச் சொன்னாள்.

அப்பொழுது நான் சொன்னேன்: “நாய்கள் முத்தம் கொடுப்பது இக்காலத்தில் பாதுகாப்பு““

அந்த இளம் ஜோடி ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு பெண் “உண்மைதான் “ என்றாள். அந்த ஆண் என்ன நினைத்தானோ !

வயதான மனிதனது கடி ஜோக் என்றிருக்கலாம்? யார் கண்டது ?

சனிக்கிழமை மிகவும் பிசியான நாள். ஒரு இலங்கையைச் சேர்ந்த பெரேரா குடும்பம், (கணவன் மனைவி மகளான இளம் பெண் ) அவர்களது 16 வயதான ரொக்சி- எழுந்து நிற்க முடியாத ஒரு சிறு நாயைக் கொண்டு வந்து, மேசையில் வைத்தனர். அது ஓலமிட்டபடியிருந்தது. அவர்கள் அதனது தோலில் உள்ள புண்ணுக்கு மருந்து தேவைப்பட்டு வந்தார்கள்

நான் சொன்னேன்: “ரொக்சியை இதற்குமேல் நீங்கள் வைத்திருப்பது கொடுமையானது . நடக்க முடியாது. ஒரே இடத்தில் கிடப்பதால் இந்தப் புண் வந்துள்ளது. வலியில் ஓலமிடுகிறது . நீங்கள் இதை கருணைக்கொலை செய்வதே ஒரே வழி. இந்த அறையவிட்டு நீங்கள் ரொக்சியை வெளியே கொண்டு செல்வதை என்னால் அனுமதிக்கமுடியாது. அப்படி விட்டால் அது நான் மிருகவதையை அனுமதிப்பது போன்ற செயலாகும்.“

அந்த இளம் பெண் “இது அண்ணனின் நாய். அவன் வர இரண்டு நாட்கள் செல்லும். அது வரையிலுமாவது..“ என பரிதாபமாக சொல்லிவிட்டு , மிகுதியை சொல்லாமல் என்னைப்பார்ததாள்.

“அப்படியானால் வாட்ஸப்பில் பேஃஸ்ரைமில் போட்டு அனுமதியைக் கேளுங்கள் ரொக்சி இதற்குமேல் தாங்காது” என்றேன்.

“நான் ஒரு மயக்க ஊசி போடுகிறேன் அடுத்த அறையிலிருந்து உங்கள் சகோதரரிடம் பேசுங்கள்“ எனச் சொல்லி அவர்களை அடுத்த அறைக்கு அனுப்பினேன்.

தகவல் அனுப்பிவிட்டு, இன்னுமொரு கறுத்த லபிரடோர் இன நாயை மடியில் வைத்தபடி எனக்காகக் காத்திருந்திருந்தார்கள்.

“எமது பிளக்கி நாய் நடக்க முடியாதிருக்கிறது. ஆனால் , உணவை உண்ணுகிறது . வலி இல்லை . மூட்டு வியாதியால் நடக்க முடியாதிருக்கிறது “

“எத்தனை வயது “ எனக்கேட்டபோது

“16 வயது”

“வழமையான லபிரடோரையும் விட இரு வருடங்கள் அதிகமாக வாழ்ந்துவிட்டது. ஆனாலும் உணவுண்பதால், நான் இரண்டு வலி போக்கும் மருந்துகளை ஏற்றுகிறேன். அதன் பின்பு எழுந்து நின்றால் பிளக்கியின் அதிஸ்டம்தான். மருந்துகள், குளிகையால் தரமுடியும். தற்போதைய நிலையில் எக்ஸ்ரே எடுப்பது எல்லாம் விரயமானது “ எனச் சொல்லியபின்பு, அந்த நாயின் தலையைத் தடவி, “ எனக்கும் இப்படி ஒரு லபிரடோர் இருக்கிறது. அதுவும் நொண்டுகிறது “ என அதனது தலையைத் தடவி வெளியே அனுப்பினேன்.

இந்த நேரத்தில் ஒரு மத்திய வயது பெண், ஆறுமாத வயதான கறுப்பு வெள்ளையான அழகான ஆங்கில கோக்கர் ஸ்பனியலை கொண்டு வந்தார்.

இதுவரை காலமும் முகத்தைப் பார்த்து வயதை கணிப்பிடலாம். இப்பொழுது மாஸ்கால் முகம் மறைக்கப்பட்டுள்ளதால் இடை - கழுத்து என மற்றைய அங்கங்களைப் பார்த்து கணிக்கவேண்டும்.

உள்ளே அழைத்ததும் அந்தப் பெண்ணை அடையாளம் கண்டுவிட்டேன். மூன்று வருடங்கள் முன்பு நான் கிளினிக் வைத்திருந்த காலத்திலே அவளது பூனைக்கு சிகிச்சை செய்ததற்குப் பணம் தராத கத்தரீனாவாகும் . அவரது தந்தை மிகவும் நல்ல மனிதர். தொடர்ந்து அவரது, பல ஹங்கேரியன் விசிலர் இன நாய்களுக்கு பல காலமாக சிகிச்சை செய்தேன். பண விடயத்திலும் நேர்மையானவர். ஆனால், மகள் அவருக்கு நேர்மாறு மட்டுமல்லாது, அவள் ஒரு விதமான சுனாமி கிளையன்ட். எப்போதாவது வருவார். வரும்போது அவரது செல்லப்பிராணிகளுக்குப் பெரிதான நோய் இருக்கும் - அப்பொழுது எக்ஸ்ரே, இரத்தப் பரிசோதனை அல்லது ஸ்பெசலிஸ்ட் எனப் பெரிய செலவாகும். பணத்தைக் கொடுப்பதற்கு எங்களுடன் கள்ளன் - பொலிஸ் என ஒளித்து விளையாடுவார். பல தரம் தொலைபேசி எடுத்து பணத்திற்கு நினைவூட்டவேண்டும்.

பழைய விடயங்களை மறந்து “ எப்படி?” என என்னை அறிமுகப்படுத்தினேன்.

“மிகவும் அழகான ஆண் நாய். என்ன விலை?“

“ஐந்தாயிரம் டொலர்.“

கூடுதல் பணத்தை கொடுத்து வாங்கிய பலர் மற்றைய விடயங்களை கவனிப்பதில்லை. அழகான நாயைப் பார்த்ததும் வரும் உணர்வு மயமான முடிவின் பின்விளைவுகளை யோசிக்காத பலரை கண்டுள்ளேன். சிலர் பன்னிரண்டாயிரம் டொலர்கள் விலையில் பிரான்ஸ் புல்டோக்குகளை வாங்கி வருவார்கள். வந்தபின்னர் பரிசோதித்துவிட்டு, இடுப்பில் பிரச்சினை உள்ளது என்பேன் - அப்பொழுதுதான் மிகவும் கவலைப்படுவார்கள் - இவ்வளவிற்கும் சாதாரணமான மத்திய தர வகுப்பிலோ அல்லது அதற்கும் குறைந்த வசதி நிலையில் இருப்பார்கள்.

“என்ன பிரச்சினை ?”

“நேற்று முழுவதும் இருமலுடன் ஒரே இடத்தில் படுத்துக் கிடந்தது. உணவெதுவும் சாப்பிடவில்லை.“

ஸ்ரெதஸ்கோப்பால் பரிசோதித்தேன். சுவாசத்தில் எதுவித மாற்றமும் இல்லை.

எனது கை விரல்களை நக்கியபோது, அதற்குக் காய்ந்த கல்லீரல் துண்டுகளை கொடுத்தேன். மெதுவாக உண்டது.

காய்ச்சல் அதிகமில்லை. மிதமான சூடு.

தொண்டையைத் தடவியபோது இருமியது - அதாவது தொண்டையில் சிக்கி உள்ளதா என வாயைத் திறந்து பார்த்தபோது எதுவுமில்லை.

இறுதியாக, “ எல்லா தடுப்பூசிகளும் போட்டீர்களா? “ என்று கேட்டுவிட்டு, நானே பழைய பதிவேட்டைப் பார்த்தேன். நாய்களுக்கு தொண்டை நோயை தரும் வைரசுக்கு தடுப்பூசி போடப்பட்டிருந்தது. “மற்றைய நாய்களுடன் சேர்ந்திருந்ததா?” எனக்கேட்டேன்.

“இல்லை, ஆனால் எங்கள் வீட்டில் எல்லோருக்கும் கொரோனா வந்தது. எனக்குத்தான் இறுதியில் நோய் பீடித்திருந்தது. தொடர்ச்சியாக எனது அறையிலே என்னோடு இருந்தது “ என்றபோது எனக்கு விளங்கியது .

எவ்வளவு முக்கியமான விடயம் ? நான் வெறும் கையோடு பரிசோதிக்கிறேன். எனது கை முகமெல்லாம் நக்குகிறது . மனதில் ஏற்கனவே இருந்த கோபத்தில் அந்தப் பெண்ணை மனதில் கொலை செய்துவிட்டேன். கழுத்திலிருந்து பாய்ந்த இரத்தம், பரிசோதிக்கும் அறையெங்கும் சிதறிப்பாய்ந்து அறையே சிவந்தது .

நான் மிருக வைத்தியர், எனக்குக் கோபம் வரக்கூடாது . கண்களை அடுத்த பக்கம் திருப்பி, சமாளித்துவிட்டு “ கொரோனா இருக்கவேண்டும். எதுவும் செய்யத் தேவையில்லை. இரண்டு நாளில் குணமாகும். உங்களுக்கு வேண்டுமானால் என்னால் அதன் தொண்டையிலிருந்து சுவப் (Swab) எடுக்கலாம். ஆனால் அதற்குப் பணம் செலவாகும்

“வேண்டாம்” என அவள் மறுத்தபோது, “கொரோனா வந்தவர்களிடமிருந்து செல்லப்பிராணிகளை தனிமைப்படுத்தவேண்டும்“ என்றேன்.

அந்தப் பெண்போனபின்னர், எனது முகம் கை எல்லாவற்றையும் கழுவியதுடன் எனக்கு உதவிய நேர்ஸ் மகியிடமும் விடயத்தை சொல்லிக் கழுவச் சொன்னேன். குதிரை வெளியேறிய பின்னர் லாயத்தைப் பூட்டுவது போன்றது எனது வார்த்தைகள் மட்டுமல்ல செயல்களுமே. ■

# கேகாலையில் திறன் பலகை வகுப்பறை திறப்பு விழா










பிரித்தானிய ரட்னம் பவுன்டேஷன் மற்றும் வன்னி ஹோப் ஆஸ்திரேலியா நிறுவனத்தின் அனுசரணையுடன் திறன் பலகை வகுப்பறைத் திறப்பு விழா அண்மையில் சப்ரகமுவ மாகாணம் கேகாலை மாவட்டம் தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்கு உட்பட்ட கேஃதெஹி பூனுகல தமிழ் வித்தியாலயத்தில் மிக பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது.

இப்பாடசாலயானது மிகவும் பின்தங்கிய தோட்டப் புறங்களில் வறுமை கோட்டின் கீழ் காணப்படும் மாணவர்கள் கல்வி பயிலும் ஒரு பாடசாலையாக காணப்படுகிறது. அதிபர் கே.ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொண்டு நிறுவனங்கள், கல்வி அதிகாரிகள், பெற்றோர், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இப்பாடசாலை தலைமை ஆசிரியரின் உரையில் நவீன திறன் வகுப்பறைகளை அன்பளிப்புச் செய்தவர்களுக்கு நன்றி பாராட்டி , காலத்திற்கேற்ப சிறந்த தொழிநுட்ப வசதிகளுடன் இந்த வகுப்பறை விளங்குவதாகவும் இதனூடாக எதிர்காலத்தில் மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்த முடியும் என உறுதி மொழி கூறினார். தொடர்ந்து விஷேட அதிதி சப்ரகமுவ மாகாண கல்வி உதவி பணிப்பாளர் திருமதி மனோகரன் மலையக மாணவர்கள் கல்வி துறையில் மிகவும் பின்தங்கியுள்ள தாகவும் அதனை நிவர்த்தி செய்ய இது போன்ற திறன் வகுப்புகள் அத்தியாவசியம் எனவும் , திறன் வகுப்பிற்கான பயற்சிகளை தன்னுடைய தலைமையின் கீழ் மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

தொடர்ந்து வன்னி ஹோப் நிறுவனத்தின் தலைவர் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக விளக்கமளித்தார்.

# ஏ.ரகுநாதனின் ‘ஓர் ஒப்பனை இல்லாத முகம்’ நூல் நிர்மலா ரகுநாதனிடம் வழங்கப்பட்டது

கலைப்பெருமகன் ஏ.ரகுநாதன் எம்மைவிட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் நிறவடையும் தருணம். அவர் என்றென்றும் எமது உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வந்த காலத்தில் பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ‘தமிழன்’ பத்திரிகையில் ‘ஓர் ஒப்பனை இல்லாத முகம்’ என்ற தொடரை எழுதியிருந்தார்.

இந்தத் தொடர் நூலுருவம் பெற வேண்டும் என்ற விருப்பத்தை ஆசிரியரிடம் கலைஞர் தெரிவித்திருந்தார். ஏ. ரகுநாதன் உபாதையுற்றிருந்த நிலையில் அவருடன் தொலைபேசி வழியாகவும் நேரிலும் தொடர்ச்சியாகப் பேசிவந்த எஸ்.கே.காசிலிங்கம் ‘ஓர் ஒப்பனை இல்லாத முகம்’ தொடரை நூலுருவாக்கம் செய்து தருவதாக உறுதியளித்திருந்தார்.

காலம் வேகமாகவே கடந்து சென்றுவிட்டது. கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்களின் வாழ்வும் முற்றுப் பெற்றுவிட்டது.

‘கோவிட்’ பெருந்தொற்று இந்த உலகத்தை பீடித்திருந்த காலகட்டத்தில் கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்களின் இழப்பு, எவரையும் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலையை ஏற்படுத்தி இருந்தது.

ஈழத்துக் கலையுலகம் சார்பில் மூன்றே மூன்று கலை உறவுகள், அவர் உடலம் தாங்கிய பேழையின் முன் நின்று அஞ்சலித்து வழியனுப்பி வைத்தனர்.

‘கோவிட்’ பேரிடர் எப்பொழுது நீங்கும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த காசிலிங்கம் அவர்கள், கிடைத்த ஓர் இடைவெளியில் கலைஞர் ஏ. ரகுநாதன் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயன்றார்.

கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர் கரங்களில் இருந்தது ‘சுட்ட பழமும் சுடாத மண்ணும்’ என்ற அவரது பவளவிழா மலர். அதில் பல கலைத்துறை ஆளுமையாளர்கள் ரகுநாதன் பற்றிய தங்கள் மனப்பதிவுகளை எழுதியுள்ளனர்.

கலைஞரின் மறைவுக்குப் பின்னர் அவர் பற்றிய விடயங்களை ஆளுமையாளர்களிடம் இருந்து பெற்று அதனையும், ‘ஓர் ஒப்பனை இல்லாத முகம்’ என ‘தமிழன்’ பத்திரிகையில் கலைஞர் ரகுநாதன் எழுதிய தொடரையும் சேர்த்து நூலாக வெளியிட எஸ்.கே. காசிலிங்கம் அவர்கள் முயன்றார்.


அதனை மிக நேர்த்தியாக நிறைவேற்றியுள்ளார்.

‘ஓர் ஒப்பனை இல்லாத முகம்’ நூலை யாழ்ப்பாணம் ஜே.ஆர் அச்சகத்தினர் சிறப்பாக அச்சிட்டுள்ளனர்.

நூலை பூபாலசிங்கம் புத்தகசாலையினர் பதிப்பித்துள்ளனர்.

‘ஓர் ஒப்பனை இல்லாத முகம்’ நூலின் முதல் பிரதியை கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்களின் மூத்த புதல்வி மருத்தவக் கலாநிதி நிர்மலா ரகுநாதன் அவர்களின் கரங்களில் கொழும்பு பூபாலசிங்கம் புத்தகசாலையில் வைத்து, பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம் அவர்கள் முன்னிலையில் தொகுப்பாசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் கையளித்துள்ளார்.

தொடர்ந்து சிறப்புப்பிரதிகளை பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம் அவர்கள் கரங்களிலும், இலங்கை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திலக்ராஜ், ‘மல்லியப்புசந்தி திலகர்’ அவர்கள் கரங்களிலும் வழங்கியுள்ளார்.








மேலைநாட்டு எழுத்தாளர்கள், அரசியலாளர்கள் தாம் எழுதும் நூல்களை நூல் நிலையங்கள், புத்தகநிலையங்களில் வைத்தே அனேகமாக வெளியிடுவார்கள். பிரான்ஸ் நாட்டில் இது வழமையில் இருந்துவருகிறது.


பிரான்ஸ் நாட்டில் இருந்து சென்ற பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் இதனை இலங்கையிலும் கைக்கொண்டு செயற்படுத்தியுள்ளார்.

‘ஓர் ஒப்பனை இல்லாத முகம்’ வெளியீட்டு விழாக்கள் பரிஸ் நகரத்திலும் ஏனைய நாடுகளிலும் நடைபெறவுள்ளன.

பூபாலசிங்கம் புத்தகசாலை ஏற்பாட்டில் விரைவில் இந்த நூலின் அறிமுக விழா கொழும்பில் நடைபெறவுள்ளது.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

38. 

தரப்பட்டுள்ள அட்டைத்தாளை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது பெட்டியின் நான்கு குற்றுக்கள் இடப்பட்ட முகத்திற்கு எதிராக உள்ள முகத்தில் காணப்படும் குற்றுக்கள் எத்தனை?

(1) 6
(2) 5
(3) 3

● நீளம், அகலம், உயரம் ஆகியன 15*cm* வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகி கீழே தரப்பட்டுள்ளது. அதன் ஒவ்வொரு பக்கத்திலும் நிறமை பூசப்பட்டு, அதிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 5*cm* வீதம் உள்ள சிறிய சதுரமுகிகள் வெட்டி எடுக்கப்பட்டன. இதற்கேற்ப, 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




39. வெட்டி எடுக்கப்பட்ட சிறிய சதுரமுகிகள் எத்தனை?

(1) 18 (2) 27 (3) 36

40. வெட்டி எடுக்கப்பட்ட சிறிய சதுரமுகிகளில் மூன்று பக்கங்களில் மாத்திரம் நிறமை பூசப்பட்டிருந்தவை எத்தனை?

(1) 5 (2) 8 (3) 9

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

வனங்கள் வனப்பு மிக்கவை. உயர்ந்த மரங்களும் அடர்ந்த புதர்களும் அங்கு காணப்படும். பறவைகள் கானமிசைத்தபடி பறந்துவரும். அருவிகள் சலசலத்து ஓடும். மான்களும் எருமைகளும் நீரருந்துவதற்காக அருவிக் கரைக்கு வரும். தெளித்துவிட்ட வண்ணக் கலவை போலப் பூவினங்கள் காட்சி தரும். இது இயற்கை அன்னை நமக்களித்த கண்கவர் காட்சியாகும். வனத்தினுள் நுழைபவரைக் குளிர்காற்று வருடிச் செல்லும். அந்த வருடலோடு நாமும் வனத்தை ரசிக்க முடியும்.

● பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) கானமிசைப்பவை எவை? : ..........
(ii) மான்களும் எருமைகளும் அருவிக் கரைக்கு வரக் காரணம் யாது? : ..........
(iii) பூவினங்கள் எதைப் போலக் காட்சி தரும்? : ..........
(iv) 'அழகு' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.: ..........
(v) இங்கு தாயாகக் குறிப்பிடப்படுவது எது? : ..........
(vi) வனத்தினுள் நுழைபவரை வருடிச் செல்வது யாது? : ..........

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அரசன், ஓர் ஒற்றனை (உழவு / உளவு) பார்க்க அனுப்பினான்.
(ii) மைதானத்தைச் சுற்றி (சிவப்பு / சிகப்பு) நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

3. படர்க்கைப் பன்மை நிகழ்காலச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) உண்டது (2) ஓடுகின்றன (3) எழுதுகின்றான்

4. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

பின்னர் / சிறிது / உடம்புக்கு / உலவுவது / உணவு / தூரம் / நல்லது / உண்ட

..........
..........

## விடைகள்

38. (3) 39. (2) 40. (2)

1. (i) பறவைகள்
(ii) நீரருந்துவதற்காக
(iii) தெளித்து விட்ட வண்ணக் கலவை போல
(iv) வனப்பு
(v) இயற்கை
(vi) குளிர்காற்று

2. (i) உளவு
(ii) சிவப்பு

3. (2) ஓடுகின்றன

4. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் உலவுவது உடம்புக்கு நல்லது.

## கல்வி tv CHANNEL-1

20.03.2022
ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

20.03.2022
ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அரசியல் வங்குரோத்தை மறைக்க கருவியாகப் பயன்பட்டது சமுர்த்தி!

## ஒப்புக்கொள்கிறார் அமைச்சர் டலஸ்



**கொழும்பு, மார்ச் 20**

**ஒவ்வொரு ஆளும் தரப்பின் அரசியல் வங்குரோத்து நிலையை மூடிமறைக்கும் கருவியாக சமுர்த்தி அபிவிருத்தி வேலைத் திட்டம் பயன்படுத்தப்பட்ட தாக அமைச்சர் டலஸ் அழகப் பெரும குற்றம் சுமத்தியுள்ளார்.**

வெலிகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், குறித்த திட்டமானது நாட்டின் வரலாற்றில் மிகவும் பாரியளவில் அரசியல் மயப்படுத்தப்பட்ட அரச வேலைத் திட்டங்களில் ஒன்று.

சமுர்த்தி வேலைத்திட்டம் அதன் உத்தேசிக்கப்பட்ட இலக்குகளை அடையத் தவறியுள்ள அதேவேளை கொரோனா தொற்றுக்கு மத்தியில் பொது மக்களுக்கு சேவையையும் வழங்கியது.

ஒட்டுமொத்த பொதுமக்களையும் பாதிக்கும் வகையில் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ளது.

இந்த நெருக்கடிகளால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சமுர்த்தி பயனர்களே. ஆகவே குறித்த வேலைத்திட்டத்தின் நோக்கங்களைப் பாதுகாக்கும் வகையில் அனைவரும் செயற்பட வேண்டும் - என்றார். (அ)

# கூர்மையான ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

கொழும்பு, மார்ச் 20

ராகம - படலந்த பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் 34 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக நேற்று முன்தினம் மாலை இந்தக் கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ராகம பகுதியை சேர்ந்த 24 வயதான சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(அ)

# கட்டுமான பொருள் விலைகளும் உயர்வு!

கொழும்பு, மார்ச் 20

சந்தையில் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்து வருவதாக கட்டுமானத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

நிலவும் அந்நிய செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுத்து கடந்த சில நாட்களாக சிமெந்து, இரும்பு உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக நாட்டில் கட்டுமானத்துறை கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் சில கட்டுமானப் பணிகளுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு அரசாங்கம் மேலதிக பணத்தை செலுத்தவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுமானத் தொழில் எதிர்நோக்கும் நெருக்கடிக்கு முகங்கொடுத்து பெருமளவிலான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இதேவேளை, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக சிமெந்து உற்பத்தியும் பல பாரிய பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளதாக 'சங்ஸ்தா' சிமெந்து நிறுவனத்தின் தலைவர் நந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் நிர்மாணத்துறை எதிர்நோக்கும் தற்போதைய பிரச்னைகள் தொடர்பில் கிராமப்புற வீடமைப்பு, நிர்மாணப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டுக்கான மாநில அமைச்சிடம் வினவிய போது, கட்டுமானத் துறைக்கான கட்டுமானப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என்றும், ஆனால் அவற்றின் விலை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இந்தியாவை அடுத்து சீனாவிடம் கடன் கேட்கிறது இலங்கை அரசு

கொழும்பு, மார்ச் 20

அந்நியச் செலாவணி நெருக்கடியை அடுத்து, கடன் கொடுப்பனவுகளை ஒத்திவைத்தல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் உள்ளிட்ட மேலதிக நிதி உதவியை இலங்கை சீனாவிடம் கோரியுள்ளது.

இந்த ஆண்டு சீன வங்கிகளுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமான கடனை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுபடும் வரை இந்த கொடுப்பனவுகளை தாமதமாக செலுத்த சீனாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, உள்ளூர் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களை வாங்குவதற்கான கடனையும் இலங்கை அரசாங்கம் சீனாவிடம் கோரியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மேலதிக நிதியுதவி கேட்டுள்ளது என்றும் இரு தரப்பும் அதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் சீனத் தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியாவிடமிருந்து 1 பில்லியன் டொலர் கடனை இலங்கை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச அலுவலர்களுக்கு சலுகை வழங்குங்கள்!

## அரசிடம் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 20

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி முடியும் வரை, அரச ஊழியர்கள் தாமதமாக வருவதற்கு சலுகை அல்லது முன்னர் பயன்பாட்டிலிருந்த வருகை பதிவு ஆவண முறையை பயன்படுத்துமாறு அரசாங்க தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால், உரிய நேரத்துக்கு பணிக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அரச ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கைரேகை பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்தும்போது, தாமதமாக வருபவர்களுக்கு சலுகை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஜித் கே.திலகரத்ன தெரிவித்தார். (அ)

# வினாத்தாள்களைத் தயாரிக்கும் கடதாசிக்கும் பெரும் தட்டுப்பாடு

## பாடசாலைகளில் பரீட்சை திகதி மாற்றம்

கொழும்பு, மார்ச் 20

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் இறுதித் தவணைப் பரீட்சைகள் தாமதப் படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண கல்விப் பணிப்பாளரினால் இது குறித்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிப்பதற்கான கடதாசி மற்றும் ஏனைய பொருள்களில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக் காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புகளுக்கான இறுதித் தவணை கால அட்டவணையில் திருத்தம் செய்யப்பட்டு, 4ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளுக்கான இறுதித் தவணை பரீட்சைத் திகதிகளுக்கு மாற்றம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புதன்கிழமை ஒப்பந்தத்தில்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...) ஒன்றுகூடி விடுவோம்" என்றார்.

அது எனக்கு சிரிப்பை வரவழைத்தது. "இப்போது பிரச்னை இல்லை என்று நினைக்கிறீர்களா? அப்படியென்றால் இந்தியாவின் 1 மில்லியன் டாலர் ஒப்பந்தத்தைப் பற்றி ஏன் கர்ஜிக்கிறீர்கள்? இந்த நிதி உதவி இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு உதவும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?" என்றேன்.

டெல்லி விஜயத்தின்போது நிதிய மைச்சர் பஸில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்தார். வங்காள விரிகுடா பலதுறை தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார ஒற்றுமைக்கான BIMSTEC மாநாட்டுக்காக அவர் கொழும்புக்கு வருவது பற்றியும் பேசப்பட்டது என்று தெரிகிறது. மார்ச் 30 ஆம் திகதி வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கருடன் அவர் கொழும்புவுக்கு வர இருக்கிறார். இதை இந்திய வெளி யுறவு அமைச்சகம் இன்னும் அதிகார பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை என்றாலும் மோடி அநேகமாக செல்வார் என்றுதான் சொல்லப்படுகிறது.

'பலாலி விமான நிலையத்தில் பிரதம மோடி வந்து இறங்கி, இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்ட யாழ்ப்பாண கலாசார மையத்தில் தமிழ்த் தலைவர்களை சந்திக்க வேண்டும்" என்ற ரெலோவின் கோரிக்கையும் எனக்கு நினைவுக்கு வந்தது. "இது சீன தூதரின் யாழ் வருகையை சமன் படுத்தும்" என்று கூறிய ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், யாழ் நூலகம், நல்லூர் கோவிலுக்கு விஜயம் செய்தல், தமிழ் ஆராய்ச்சி மாநாடு உயிர் நீத்த நினைவு தூபிக்கு மலர் வளையம் வைத்தல் இதுவும் தமிழ் மக்களின் மனங்களில் இடம் பிடிக்கும். பிரிட்டனிலிருந்து பிரான்ஸின் யூரோஸ்டாருக்கு பாலம் அமைத்தது போல தலைமன்னார் இராமேஸ்வரம் பாலம் இணைக்கப்படவேண்டும் . இது தொலைநோக்கில் ஈழத் தமிழர்கள்களுக்கு ஒரு பாது காப்பானதும் இந்திய பாது காப்பிற்கு இராணுவ ரீதியில் மிகவும் அனுகூலம் வாய்ந்தது". என்று கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள் விஜயமாக சென்ற டிசெம்பரில் வந்த சீன தூதுவர் ஜீ ஜென்சாங், "இது வெறும் ஆரம்பம்தான்" என்றார். பாக் ஜலசந்திக்குக் குறுக்கே 17 நாட்டிகல் மைல் தூரத்தில் ராமர் பாலத்தின் மூன் றாம் திட்டுக்கு இலங்கை கப்பற் படை அவரை அழைத்துச் சென்றது. அருகிலிருந்த இலங்கை அதிகாரிகளிடம் ஜீ ஒரு கேள்வியைக் கேட்டார் - "இங்கிருந்து இந்தியா எத்தனை தூரம்? எந்த திசையில் இருக்கிறது?"

ஜீயின் இலங்கை வருகை, அவரது குத்தலான கேள்விகள், யாழ்ப்பாண நூலகத்தில் இந்திய பகுதிக்கு அவர் சென்றது என்பதைப் பற்றியெல்லாம் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தெரிந்திருக்கும். தெரிந்திருந்தால் அவர் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளையும் நிச்சயமாக ஏற்பார் என்று நம்புகிறேன்.

ஆனால் தமிழ்த்தலைவர்களிடையே இருக்கும் ஒற்றுமையின்மை பற்றிக் கவலையோடு விளக்கிய வெள்ளிக்கிழமையன்று வந்த ஈழநாடு தலையங்கத்தை நாம் மீண்டும் ஒரு முறை படிக்கவேண் டாமா?

தலையங்கத்தின் இறுதி எச்சரிக் கையை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். "இப்படித்தான் தமிழர் களின் அரசியல் பயணிக்கப் போகின்றது என்றால், ஒரு போதுமே தமிழர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கப் போவதில்லை. இந்தியாவின் அழுத்தத்தை முன்வைத்து, களத்திலும் தமிழ்நாட்டிலும், புதுடில்லியிலும் ஒரே குரலில், ஒரே கோரிக்கையின் கீழ், செயலாற்ற வேண்டும். அந்தக் கோரிக்கை கடிதத்தில் முன்வைத்த கோரிக்கையிலிருந்து விலகிச் செல்லக் கூடாது. இதற்கு முதலில் களத்தில் தமிழ் தேசிய தரப்புக்கள் ஓர் ஐக்கிய முன்னணியாக மாற வேண்டும். ஆனால், அதற்கான வாய்ப்புக் கள் தென்படவில்லை. தமிழர்கள் தங்களை தயார் படுத்தாமல், மற்றவர்களின் தலையீட்டை கோருவதில் எவ்வித பயனும் ஏற்படப் போவ தில்லை."

மன்னிக்கவும், நீண்ட நேரத்தை எடுத்துக்கொண்டு விட்டேன். ஞாயிறு உங்களுக்கு ஓய்வுக்கான நாள் என்று மறந்து போனேன். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

## இந்திய....

எனவும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவிடம் நூறு கோடி அமெரிக்க டொலர் புதிய கடன் பெற்று அதன் மூலம் அங்கிருந்து உணவு, மருந்து, எண்ணெய் ஆகிய அத்தியாவசிய பொருட்களையும் இலங்கை பெறுகிறது. கடந்த காலங்களில் இந்தியாவை திட்டி தீர்த்து, கரித்து கொட்டிய, இவர்கள், இன்று புதுடில்லிக்கு போய் கைகட்டி நிற்கிறார்கள். இந்த இந்திய கடனுதவி கிடைத் திராவிட்டால், இந்த சித்திரை சிங்கள-தமிழ் புது வருடம், ராஜபக்ஷ அரசுக்கு கடைசி வருடமாகி இருக்கும். புத்தாண் டின்போது இலங்கை அரசின் நிலை மையும் சிரிப்பாய் சிரித்திருக்கும்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியுடன் உரையாடி பழைய கடன்களை மறுசீரமைக்க முயல்கிறார்கள். அதைத்தான் செய்யவேண்டும். வேறு வழியில்லை. இதற்கு முன் நடைபெற்ற ராஜபக்ஷ அரசாங்கங்கள் கண்மூடித்தனமாக கடன் வாங்கி, பிரயோஜனமற்ற விடயங்களில் முதலீடு செய்து, வீணடித்து ஏற்றி வைத்துள்ள கடன் சுமையை, திருப்பி செலுத்த, கால அவகாசம் பெற்று, மறுசீரமைக்கா விட்டால், இலங்கை அதோகதிதான்.

நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டு வந்துள்ள இந்த ராஜபக்ஷ மூளைகளை கொழும்பு நூதனசாலையில் வைத்து நாம் பாதுகாக்கவேண்டும்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பை கரிசனையில் எடுக்காமல் இலங்கையின் இன்றைய அரசு அராஜகமாக செயற்பட்டது. இந்நிலைமை நீடித்து இருந்தால், இங்கும் ஒரு உக்ரைன் நிலைமை ஏற்பட்டு இருந்தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்று இலங்கை - இலங்கை உறவுகள் ஒப்பீட்டளவில் சீரமைக்கப்பட்ட காரணத்தால் இந்நிலைமை தவிர்க்கப்பட்டுள்ளது என நினைக்கிறேன்.

பொருளாதார சீரழிவு மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகியவற்றை இந்தியாவின் உதவியுடன் பாதுகாக்க முயலும் அரசு, இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள பரஸ்பர ஒப்பந்தங்களையும் நேர்மையுடன் அனுசரிக்க வேண்டும்.

இந்தியாவிடம் புதிய கடன் வாங்கி அத்தியாவசிய பொருட்களை மக்களுக்கு வழங்குவதை போன்று சர்வதேச நாணய நிதியிடம், பொருள் வாங்க கடன் பெற முடியாது. இதுபற்றி இன்று இலங்கை அரசுக்கு உள்ளேயே தெளிவில்லை. சர்வதேச நாணய நிதியை நாடுவது ஏற்கனவே வாங்கிய கடன்களை, கால அவகாசம் பெற்று எப்போது, எப்படி திருப்பி செலுத்துவது என்ற மறுசீரமைப்புக்காக என்பதை மறக்கக்கூடாது- என்றார். (அ)

## மஹிந்த....

களின் சங்கம் ஆகியன இணைந்து நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே இந்த போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் தெரிவித்ததாவது;

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எங்கள் நிலத்திலே வந்து தமிழினத்துக்கு எதிராக நடவடிக்கைகளை செய்வதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது. நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் மஹிந்த வழிபாட்டுக்கு வருவதாக ஏற்பாடாகி இருக்கின்றது. தமிழின அழிப்பை மேற்கொண்டிருந்த மஹிந்த எங்களுடைய மண்ணுக்கு வருவதை எதிர்க்கின்றோம்.

அரசியல் கட்சித் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், மாணவர் அமைப்புகள் மகளிர் அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்புகள், பொதுமக்கள்,இளைஞர் மன்றங்கள் என அனைத்து தரப்பினரும் இன்று முற்பகல் 10 மணியளவில் நல்லூர் ஆலய முன்றலில் ஒன்றுகூடி ஒட்டு மொத்த எதிர்ப்பை காட்டவேண்டும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் இந்த போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்கி நிற்கின்றது- என்றார். (அ-03)

## கந்தரோடை....

ஸ்தலங்களுக்கு சென்று வழிபாடுகளை மேற் கொண்டார். அதன் ஒரு அங்கமாக கந்தரோடை விகாரைக்கும் சென்று வழிபடத் தீர்மானித்திருந்தார்.

கந்தரோடை விகாரையில் பிரதமர் அடிக்கல் நாட்டுவதாக செய்தி வெளியான நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக் களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திடீரென கந்தரோடை விகாரைக்கான தனது விஜயத்தை ரத்து செய்தார்.

இதனையடுத்து அப்பகுதியில் பிரதமரின் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கிருந்து விலகிச்சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## பால்மா....

இதேவேளை, அண் மைக்காலமாக இறக்கு மதி செய்யப்படும் பால் மாவின் விலை இரண்டு தடவைகள் அதிகரிக்கப்பட் டுள்ளது.

தற்போது இறக்குமதி செய்யப்பட்ட 400 கிராம் பால்மா பைக்கெட் 540 ரூபாய்க்கும் ஒரு கிலோ பால் மா பைக்கெட் 1,345 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, தற்போது சந்தையில் பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, பால் மாவை கொள்வனவு செய்வதற்காக நேற்று பல பகுதிகளில் மக்கள்

நீண்ட வரிசையில் காத்து நிற்கின்றனர். (அ)

## பஸ்...

நிர்ணயிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

வருடாந்த பஸ் கட் டண மீளாய்வின் அடிப்படையிலேயே இந்தக் கட்டண உயர்வு இடம் பெறவுள்ளது.

அதேவேளை, நாட் டில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதை யடுத்து சில நாட்களுக்கு முன்னரே பஸ் கட்டணம் 15 வீதத்தால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## டக்ளஸுக்கு....

நிலையில், அந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்கேற்க இருந்தார்.

இந்த நிலையில், கோவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளமையால், அவர் அந்த நிகழ்வுகளில் பங்கேற்கமாட்டார்.

## அதிகளவு....

இளைஞர், போதைப்பொருளுக்கு கடந்த 4 ஆண்டுகளாக அடிமையாக இருந்து வந்துள்ளார். அதனால் வீட்டில் பணம் கேட்பது மற்றும் திருட்டுகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார். அவரை மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்பப் பெற்றோர் முயற்சித்துள்ளனர்.

நேற்று காலையில் ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்த இளைஞர் நெஞ்சைப் பொத்தியவாறு நிலத்தில் சரிந்து உயிரிழந்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞரின் உயிரிழப்பு அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டமையால் ஏற்பட்டது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட தெல்லிப்பழை கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்தார். இந்த நிலையில் 2 வாரங்களில் மற்றொரு இளைஞனும் அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை உட்கொண்டதனால் உயிரிழந்துள்ளார். (அ)

## வடக்கு மக்களை நாம்....

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரம் வழங்கும் வகையில் யாழ்ப்பாணம் நயினாதீவு ரஜமஹா விகாரையில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரை என்பது புத்தரின் வருகையால் புனிதமடைந்த இடமாகும். சூலோதர மஹோதர மாமாவுக்கும் மருமகனுக்கும் இடையே எழுந்த இரத்தினக்கல் கதிரைக்காக்க நடந்த போரை நிறுத்துவதற்காக புத்தபெருமான் இந்த புனித இடத்திற்கு வந்ததாக சாசன வரலாறு கூறுகிறது.

அப்போது அனைவருக்கும் தர்மம் உபதேசம் செய்யப்பட்டதால், ஏற்படவிருந்த பெரும் பேரிடரை தடுத்து நிறுத்த முடியும்.

அன்றிலிருந்து இந்த பெறுமதி வாய்ந்த இடம் சிங்கள பௌத்தர்கள் மட்டுமன்றி பௌத்த தத்துவத்தில் பற்று கொண்ட அனைத்து தேசிய இன மக்களும் வழிபடும் இடமாக மாறியுள்ளது.

துடுகெமுனு மன்னன், சத்தாதிஸ்ஸ மன்னன் போன்ற மாபெரும் ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் இந்த இடத்தை பாதுகாத்ததாக வரலாறு கூறுகிறது.

வடக்கிலும் தெற்கிலும் பழங்காலத்திலிருந்தே மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளனர் என்பதை இது நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்ட பாதகமான நிகழ்வுகளால் 30 வருடங்களுக்கு மேலாக இந்த இடம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது என்று கூறுவது சரியானது. தென்னிலங்கை மக்கள் வடபகுதிக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அன்றைய காலப்பகுதியில் இலங்கை கடற்படையினர் இந்த ஆலயத்தை பராமரித்து பாதுகாத்து வந்ததோடு பிக்குகளுக்கு அன்னதானம் வழங்கியதையும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

வடக்கு மாகாணத்தை மையமாகக் கொண்ட யுத்தம் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் மக்களையும் அழித்தது. இவ்விகாரையை பராமரிக்க அப்பகுதியில் வாழும் ஏராளமான தமிழர்களும் ஒன்று திரண்டு வந்ததை மரியாதையுடன் நினைவு கூர்கிறேன்.

அவர்கள் மற்றும் கடற்படையினரின் உதவியோடு இவ்விகாரை தற்போதைய விகாராதிபதியினால் அபிவிருத்தி செய்யப்பட்டது. எமது வணக்கத்திற்குரிய நவதகல பதுமகித்தி நாயக்க தேரர் அவர் என்னுடன் மிகவும் நட்புடன் பழகும் தேரர்.

மேலும், அவர் சொல்ல வேண்டியதை பயப்படாமல் சொல்வதும் அவரிடமிருந்து நான் கண்ட பண்புகளில் ஒன்று.

மேலும் இந்த பகுதி மீதும் விகாரையின் மீதும் மிகுந்த அன்பு கொண்டவர். அவர் இந்த மக்களையும் விகாரையையும் விட்டு வெளியே வரவே இல்லை . எனக்கும் அரசாங்கத்துக்கும் மிகவும் விசுவாசமாக இருந்தார்.

புத்தர் பீடத்தை சீர்செய்தல், பக்கச்சுவர் அமைத்தல், விகாரை மற்றும் தேவ மந்திராவை புனரமைத்தல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சமூகங்களுக்கு தேவையான சுகாதார வசதிகளை விரிவுபடுத்துதல் போன்றவற்றை எம்மால் செய்ய முடிந்தது.

மேலும், நயினாதீவில் உள்ள நயினாதீவு விகாரைக்கு செல்லும் பாதையை அமைக்கவும், மருத்துவமனையை சீரமைக்கவும் முடிந்தது.

நயினாதீவு மற்றும் ஏனைய தீவுகளுக்கு செல்லக்கூடிய குறிகட்டுவான் ஜெட்டியை புனரமைத்து, நயினாதீவு விகாரைக்கு வருகை தரும் பக்தர்களுக்கான தங்குமிட வசதிகளை மேலும் மேம்படுத்தவும் நாம் எதிர்பார்க்கிறோம். இந்த ஆலயம் புனிதமான இடமாக மாற்றப்பட்டதன் காரணமாகவே இவை அனைத்தும் சாத்தியமானது என்றே கூறவேண்டும்.

30 ஆண்டு கால பயங்கர போருக்குப் பின்னர் இந்த விகாரையை பெரிய அளவில் மேம்படுத்தி பக்தர்கள் வழிபடும் இடமாக மாற்ற நினைத்தோம்.

எனவேதான் கடந்த வருட அரச வெசாக் விழாவை வடமாகாணத்தில் இந்த ஆலயத்தை மையப்படுத்தி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாக, உலகம் முழுவதையும் மூழ்கடித்த கொவிட் 19 தொற்றினால் அதனை செய்ய முடியாது போனது.

இதனை நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் புத்தசாசன அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.இந்த நிகழ்வை பிரமாண்டமாக நடத்துவதற்கு அரசு அமைப்புகள், பாதுகாப்புப் படையினர் உட்பட இந்தப் பகுதி மக்கள் திட்டமிட்டனர்.

எனினும், சுகாதாரத் துறையின் ஆலோசனையின் பேரில், நிகழ்ச்சியை ரத்து செய்தோம். இந்த விகாரையின் மீதும், இந்த மாகாணத்தின் மீதும், அங்கு வாழும் மக்கள் மீதும் கொண்ட பக்தியின் காரணமாகவே இந்த விழாக்களில் இணைந்தோம் என்றே கூற வேண்டும்.

அப்போதும் நாங்கள் வடக்கு மக்களை பாதுகாத்தோம். ஜனாதிபதியும் எமது அரசாங்கமும் இன்று அந்த மக்களைப் பாதுகாத்து இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்விகாரைக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் தேவையான வசதிகளை செய்து கொடுத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

இப்பணிகளை முன்னெடுப்பதில் புத்தசாசன அமைச்சு உட்பட அரச நிறுவனங்களும், இலங்கை கடற்படை மற்றும் இராணுவமும் கணிசமான பங்காற்றியுள்ளன.

இந்தப் புனித பூமியைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் அரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்தையும் தொடர்ந்து செய்யும் என்று உறுதியளிக்கிறேன்-என்றார். (அ)

## மஹிந்தவின்....

ராஜபக்ஷவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமலாக்கப்பட்டோரை கண்டறிய சர்வதேச விசாரணை வேண்டும், இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும், கந்தரோடையில் புத்தர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டாதே, நாவற்குழி சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்து போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க. சுகாஸ் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (அ-03)

## நாடு....

தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடை பெற்று வரும் போராட்டங்கள் அரசியல் கட்சி களுக்கு அப்பாற்பட்டு வெகுஜனப் போராட்டமாக உருவெடுத்து வருவதாக புலனாய்வுத்துறை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த நெருக்கடியானது மக்களின் அடிப்படை உணவுத் தேவைகளை வழங்க நிர்ப்பந்திப்பதன் மூலம் கடுமையான சமூக நெருக்கடியை உருவாக்குவதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் அதே நேரத்தில் பணவீக்கமும் உயரும் போது மக்களின் உள்வாங்கும் சக்தி குறைந்து விரக்தி நிலையை உருவாக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# சர்வகட்சி மாநாட்டை புறக்கணிக்க வாசு, விமல், கம்மன்பில தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 20

**ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, முன்னாள் அமைச் சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.**

மாறாக சர்வகட்சி மாநாட்டுக்கு அரசாங்கத்தின் 10 பங்காளிக் கட்சிகளில் இருந்து இரண்டு பிரதி நிதிகளை மாத்திரம் அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகி யோர் கலந்துகொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடு வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் புதன் கிழமை சர்வகட்சி மாநாடு நடை பெறவுள்ளது.

வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் கலந்துரையாட லுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்த காரணத்தால் அதில் கலந்து கொள்வதில்லை என தீர்மானித் துள்ளதாக பங்காளிக் கட்சித் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக் கடி நிலை குறித்து ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவிலோ, ஆளும் கட்சி யிலோ, அமைச்சரவையிலோ விவா திக்காமல் சர்வகட்சி மாநாட்டை கூட்டுவது பொய் என்றும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் அரசாங்கத்தின் மீது பழி சுமத்தும் இந்த தருணத் தில், அந்த கண்டனத்தை பகிர்ந்து கொள்வதற்காக அனைத்து கட்சி மாநாடு கூட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ)

# 13 ஆண்டுகளின் பின்னர் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி!



கொழும்பு, மார்ச் 20

தேயிலை உற்பத்தி யானது, 13 ஆண்டு களின் பின்னர் வீழ்ச்சிப் போக்கில் பதிவாகி யுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் நாட்டின் தேயிலை உற்பத்தி, 18.16 மில்லியன் கிலோகிராமாக பதிவாகியுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இது 20 சதவீத வீழ்ச்சியாகும் என தேயிலை சபையின் தரவு களின் மூலம் அறியக்கூயதாக உள்ளது.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12.8 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்த நிலையில், அதன் பின்னர் மாதமொன்றில் பதிவான ஆகக்குறைந்த தேயிலை உற்பத்தி இதுவாகும் என தேயிலை தரகு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்பட்ட இர சாயன உரத் தடை இதற்கு காரணமாகும் என குறிப் பிடப்படுகிறது

தேயிலைத் தொழிற்துறைக்காக, அந்தத் தடை கடந்த ஒக்ரோபர் மாதம் நீக்கப்பட்டபோதிலும், டொலர் பற்றாக்குறையால், உர இறக்குமதியானது, தேயிலை உற்பத்தியில் தாக்கத்தை செலுத்தியது.

இரசாயன உரத் தடைக்கு முந்தைய காலத்தில், இலங்கையின் வருடாந்த தேயிலை ஏற்றுமதி மூலம் 1.3 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்தது.

இந்த நிலையில், இலங்கையின் தேயிலை தொழிற் துறைக்கு தற்போது தாக்கம் செலுத்தும் புதிய காரணி யாக, ரஷ்ய - உக்ரைன் போர் அமைந்துள்ளது.

இலங்கையின் தேயிலையைக் கொள்வனவு செய்யும் முக்கியமான கொள்வனவாளர்களான ரஷ்யாவும், உக் ரைனும், நாட்டின் தேயிலை உற்பத்தியில் 10 சத வீதத்தை இறக்குமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பல்பொருள் விற்பனை நிலையமாகும் நாவற்குழி உணவுக் களஞ்சியசாலை





யாழ்ப்பாணம், மார்ச் 20

நாவற்குழி உணவுக் களஞ்சியசாலையை ‘ரஜவாச’ பல்பொருள் விற்பனை நிலையமாக மாற்றுவதற்கான புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு களஞ்சிய சாலை ஆணையாளருக்கு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன யாழ். மாவட்டத்துக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டார்.

இதன்போது, நாவற்குழி உணவுக் களஞ்சிய சாலையை, உடனடியாக புனரமைத்து குடாநாட் டுக்கான அத்தியாவசிய பொருட்களை சேமித்து விநி யோகம் செய்யும் களஞ்சியமாக மாற்றுமாறு களஞ்சிய சாலை ஆணையாளருக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

மேலும், நெருக்கடி நிலைகளுக்கு பின்னதாக இக் களஞ்சியத்தை, ‘ஒரே கூரையின் கீழ் அனைத்து அரச அங்காடிகளும் என்ற அடிப்படையில் நாடு முழுவதும் அமையவுள்ள ‘ரஜவாச’ பல்பொருள் விற்பனை நிலைய மாக மாற்றுமாறு, அங்கஜன் இராமநாதன் முன்வைத்த கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக் கொண்டு அதற்குரிய பணிகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இவ்விஜயத்தின் போது, யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அர சாங்க அதிபர் க.மகேசன், வர்த்தக அமைச்சின் அதிகாரி கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

(அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 6 ஆயிரத்து 261 டெங்கு நோயாளர்கள் பதவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் அதிகூடிய டெங்கு நோயா ளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாதத்தில் மாத்திரம் 4 ஆயிரத்து 522 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு குறிப்பிட் டுள்ளது.

அத்துடன், கடந்த மாதத்தில் மாத்திரம் ஆயிரத்து 511 நோயாளிகளும், இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 228 டெங்கு நோயாளர்களும் பதிவாகி யுள்ளனர்.

இடைக்கிடை மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பில் பொதுமக் கள் அவதானமாக செயற்படவேண்டும் எனவும் சுகா தார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித் துள்ளது.

(அ)

# பருத்தித்துறையில் எரிவாயுவுக்கு வரிசையில் காத்திருக்கும் மக்கள்

வடமராட்சி, மார்ச் 20

பருத்தித்துறை துறைமுகத்துக்கு அண்மித்த பகுதியில் லிற்றோ எரிவாயு நிறுவனம் தனது வாடிக்கையாளர் களுக்கு எரிவாயு வழங்கி வருகிறது. அதனை பெற்றுக் கொள்வதற்கு வெற்று எரிவாயு கொள்கலன்களுடன் வாடிக்கையாளர்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

நேற்று சனிக்கிழமை முற்பகல் 10:30 மணி முதல் எரிவாயு நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

(அ-02)












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-காதலுக்கு மரியாதை
4.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்



**இரவு**
7.00 மணி : SPOTLIGHT-எம்.ஏ.சுமந்திரன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை - அம்பிகா சற்குணம்




**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**சிவ ஒளி**

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு